மலர் 8 • இதழ் 2 • ஜூன் 2023 • ரூ.20/-

AGARAM FOUNDATION
அறம் செய விரும்பு

# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி



## பள்ளியை இனிமை ஆக்குங்கள்!

## 7.5% ஒதுக்கீட்டில் என்னென்ன படிக்கலாம்?

## கல்வி அனுபவம் சிறக்க வேண்டும்!

# மரம் வளர்ப்போம்
# மழை பெறுவோம்



சமுதாய நலன் கருதி வெளியிடுவோர்




**சக்தி ®**

**மசாலா**




**சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்**
6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.
போன் : 0424 - 2533601.
E-mail : headoffice@sakthimasala.co.in
www.sakthimasala.com

• **சக்தி** மசாலா சமையல் பொடி வகைகள் • **சக்தி** ஊறுகாய் வகைகள் • **சக்தி** சன் பிளவர் ஆயில் • **சக்தி** பருப்பு வகைகள்
• **சக்தி** பஜ்ஜி போண்டா மாவு • **சக்தி** ராகி மாவு • **சக்தி** கடலை மாவு • **சக்தி** அப்பளம் • நெய்

ENGINEERING | ARCHITECTURE | DENTAL | RESEARCH | ARTS & SCIENCE

# YOUR CAREER BEGINS WITH US






COURSES AVAILABLE

Aeronautical | Automobile | Bioinformatics | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science and Engineering | Electrical and Electronics | Electronics and Communication | Electronics and Telecommunication | Electronics and Instrumentation | Information Technology | Mechanical | Mechanical and Production | Bachelor of Architecture (B.Arch.) | Bachelor of Dental Surgery (BDS)

100% PLACEMENT OPPORTUNITY

ADMIRABLE INFRASTRUCTURE

WORLD CLASS ACADEMIC AMBIENCE

EMINENT FACULTY

SATHYABAMA UNIVERSITY

(Established under section 3 of the UGC Act, 1956)
Declared as Category " A " University by MHRD, Government of India

facebook.com/SathyabamaUniversityOfficial

www.sathyabamauniversity.ac.in

Jeppiaar Nagar, Rajiv Gandhi Salai, Chennai - 600 119.

Phone : Administrative Office: 044-2450 3150 / 51 / 52 / 53 / 54 / 55 | Entrance Exam Office: 044-24502436 | Fax : 044 - 2450 2344

**அனைவருக்கும் அன்பு வணக்கம்.**

பள்ளிக்கல்வி தொடர்பாகச் சமீபத்தில் வெளியாகியுள்ள இரண்டு தகவல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. நாம் எப்படிப்பட்ட கல்வி அனுபவத்தை நம் பிள்ளைகளுக்குக் கொடுக்கிறோம் என்பதற்கான அடையாளங்கள் இவை.

முதல் விஷயம், ஆரம்பக் கல்வி தொடர்பானது. 14 ஆண்டுகளுக்கு முன்பு கல்வி உரிமைச் சட்டம் அமலானது. 'இந்தியாவில் இனி ஓராசிரியர் பள்ளிகளே இருக்கக்கூடாது' என்று அந்தச் சட்டம் சொன்னது. குழந்தைகளுக்கு இனிமையான கல்வி அனுபவம் கிடைக்க வேண்டும் என்றால், குறைந்தபட்சம் ஒரு பள்ளியில் இரண்டு ஆசிரியர்களாவது இருக்க வேண்டும் என்று அது கூறுகிறது. ஆனால், இந்தியாவில் இப்போதும் ஆரம்பப் பள்ளி மாணவர்களில் ஏழில் ஒருவர் ஓராசிரியர் பள்ளியில்தான் படித்து வருகிறார்கள்.

மத்தியக் கல்வி அமைச்சகம் சார்பில் இந்தியா முழுக்க இருக்கும் அனைத்துப் பள்ளிகளின் விவரங்களும் UDISE (Unified District Information System for Education) என்ற இணையதளத்தில் சேகரிக்கப்படுகின்றன. இதில் அரசு ஆரம்பப் பள்ளிகளின் விவரங்களை அலசிப் பார்க்கும்போது இந்த விஷயம் தெரிய வந்துள்ளது. இந்தியா முழுக்க உள்ள அரசு ஆரம்பப் பள்ளிகளில் 14.7% பள்ளிகளில் ஒற்றை ஆசிரியர் மட்டுமே இருக்கிறார்.

# கல்வி அனுபவம் சிறக்க வேண்டும்!



இதில் இந்தியாவிலேயே மிக மோசமான மாநிலமாக ஜார்கண்ட் கருதப்படுகிறது. அங்கு உள்ள அரசு ஆரம்பப் பள்ளிகளில் 30.9% பள்ளிகளில் ஓராசிரியர் மட்டுமே இருக்கிறார். இதற்கு அடுத்த இடம் கர்நாடகாவுக்கு! அங்கு 29% ஓராசிரியர் பள்ளிகள். இமாசலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஆந்திரா ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. தமிழகத்திலும் 8.3% அரசு ஆரம்பப் பள்ளிகளில் ஓராசிரியர்தான் இருக்கிறார். தமிழகத்தில் ஆரம்பக் கல்வி பயிலும் குழந்தைகளில் 4.1% பேர் ஓராசிரியர் பள்ளிகளில் படிக்கிறார்கள்.

பெரும்பாலும் இத்தகைய பள்ளிகள் மலைப் பிரதேசங்களிலும் உள்ளடங்கிய கிராமங்களிலுமே இருக்கின்றன. சமூகரீதியாகவும் பொருளாதார நிலையிலும் மிகவும் அடித்தட்டில் இருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளே இந்தப் பள்ளிகளில் படிக்கிறார்கள். இங்கிருக்கும் ஆசிரியர்களுக்கு நிர்வாகப் பணிகளும் நிறைய இருக்கும்.

அதையெல்லாம் முடித்துவிட்டு அவர்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும். முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே ஆசிரியர் நாள் முழுக்க எப்படி கற்றுத் தர முடியும்? அந்தக் கற்றல் எப்படிச் சிறப்பாக இருக்கும்? நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது. கல்விதான் ஒருவரை உயர்த்தும் ஏணி. அந்தக் கல்வியின் அடித்தளம் ஆரம்பப் பள்ளியில்தான் போடப்படுகிறது. அது வலுவாக இல்லாதபோது, ஒரு குழந்தை கல்வியின் மீதான ஆர்வத்தை முற்றிலுமாக இழந்துவிடும் ஆபத்து உள்ளது. 'ஓராசிரியர் பள்ளிகளே இல்லை' என்ற நிலை வரும்போதுதான் நாம் கல்வியில் முன்னேறிய சமூகமாக மாறுவோம்.

இன்னொரு பக்கம், மேல்நிலைக் கல்வி குறித்த ஒரு புள்ளிவிவரமும் கவலையை ஏற்படுத்துகிறது. கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 35 லட்சம் மாணவர்கள் 10–ம் வகுப்புடன் பள்ளிக்கல்வியை நிறுத்திக்கொண்டுள்ளனர் என்று மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இவ்வாறு இடைநிற்றல் அதிகம் இருக்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று.

கடந்த 2021–22ம் கல்வியாண்டில் நாடு முழுவதும் 10–ம் வகுப்பில் சேர்ந்த சுமார் 35 லட்சம் மாணவர்கள், 11–ம் வகுப்புக்குச் செல்லவில்லை. இதில் 27.5 லட்சம் மாணவர்கள் தோல்வியடைந்துள்ளனர். 7.5 லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதப் போகவில்லை. இதில் கவலையளிக்கக்கூடிய விஷயம் என்னவெனில், சி.பி.எஸ்.இ உள்ளிட்ட மத்தியக் கல்வி வாரியங்களில் மாணவர்களின் தோல்வி விகிதம் 5 சதவிகிதமாக இருக்கிறது. அங்கு மாணவர்கள் எண்ணிக்கை குறைவு என்பதும், தனியார் பள்ளிகளே அதிகம் என்பதும் இதற்குக் காரணமாக இருக்கலாம். மாநில அரசுகளின் கல்விமுறையில் படிக்கும் மாணவர்களின் தோல்வி விகிதம் 16 சதவிகிதமாக இருக்கிறது. 10–ம் வகுப்பில் தோல்வியடைந்த மாணவர்களில் சுமார் 4.5 லட்சம் பேர் மட்டுமே தேசிய திறந்தநிலைப் பள்ளிக்கல்வி நிறுவனம் (NIOS) மூலம் தேர்வு எழுதுகின்றனர்.

11–ம் வகுப்புக்குப் போகாத இந்த 35 லட்சம் மாணவர்களில் 85 சதவிகிதம் பேர், 11 பெரிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். இதில் தமிழ்நாடும் ஒன்று. உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், குஜராத், ராஜஸ்தான், கர்நாடகா, அசாம், மேற்கு வங்காளம், ஹரியானா மற்றும் சத்தீஸ்கர் ஆகியவை பிற மாநிலங்கள்.

12–ம் வகுப்பு முடித்த மாணவர்கள் உயர்கல்வி சேர்கிறார்களா என்பதைக் கண்டறிய தமிழ்நாடு அரசு திட்டம் தீட்டியிருப்பது போலவே, பத்தாம் வகுப்பு முடித்தவர்கள் மேல்நிலைக் கல்வியில் சேர்வதையும் உறுதி செய்ய வேண்டும். இடைநிற்றல் இல்லாமல் போகும்போதே, பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்கும்.

அன்புடன்,

**சூர்யா**

நிறுவனர் – அகரம் பவுண்டேஷன்


AGARAM **யாதும்**

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

தமிழ் மாத இதழ்

மலர் 8 • இதழ் 2

ஜுன் 2023

கௌரவ ஆசிரியர்

**திரு. சூர்யா**

பதிப்பாளர் – ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**கே.உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:


தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033
தொலைபேசி : 9952920801



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by T.J.Gnanavel,
on behalf of
Tharu Media (P) Ltd.,
10/55,Raju Street,
West Mambalam,
Chennai - 600 033.
email:
contactyadhum@gmail.com




# அடையாளமும் அட்டைப் பெட்டியும்!

குழந்தைக் கதைகளில் ‘வெளவால்’ பற்றிய கதைகள் குறைவு. வெளவால் – ஒரு பறக்கும் பாலூட்டி. Stellaluna – பழம் தின்னும் வெளவால் பற்றிய குழந்தைக் கதை. பெரும் வரவேற்பைப் பெற்ற கதை.

Stellaluna என்பது குட்டி வெளவாலின் பெயர். ‘ஸ்டெல்லா’ என்றால் நட்சத்திரம். ‘லூனா’ என்றால் நிலா. நட்சத்திரமும் நிலாவும் கைகோர்த்த பெயர் ஸ்டெல்லாலூனா.

ஆந்தை ஒன்றின் தாக்குதலால் தாய் வெளவாலைப் பிரிகிறது குட்டி வெளவால் ஸ்டெல்லா. பறவை ஒன்றின் கூட்டில் போய் விழுகிறது. அங்கே ஏற்கனவே மூன்று பறவைக் குஞ்சுகள். ஸ்டெல்லாவைப் பார்த்ததில் குஞ்சுகளுக்குக் குதூகலம். தாய்ப் பறவைக்கும் ஸ்டெல்லா மீது அனுதாபம். பாவம், குட்டி வெளவால்! ‘‘பூச்சிகளைத் தின்னப் பழக வேண்டும்; இரவில் தூங்க வேண்டும்; தலைகீழாகத் தொங்கக்கூடாது (என் பிள்ளைகள் பயப்படுவார்கள்)’’ என்று

பார்த்ததும் படித்ததும் 13
கல்விச் சிந்தனைகள்


**பேராசிரியர் ச.மாடசாமி**

கண்டிஷன் போட்டு ஸ்டெல்லாவை ஏற்கிறது தாய்ப் பறவை.

தாய்ப்பறவை கொண்டு வரும் பூச்சிகளைத் தின்று ஸ்டெல்லா வளர்கிறது. பறவைக் குஞ்சுகளும் ஸ்டெல்லாவும் இப்போது நல்ல நண்பர்கள்.


ஒரு நாள் பறவைக் குஞ்சுகள் பறக்கப் பழகுகையில் ஸ்டெல்லாவும் கூட்டை விட்டு வெளியே பறக்கிறது. வெளியே வந்த ஸ்டெல்லா, பிரிந்த தன் தாய் வௌவாலைப் பார்க்கிறது. குடும்பத்தோடு சேர்ந்து கொள்கிறது. இழந்த அடையாளம் திரும்புகிறது. பழங்களைத் தேடித் தின்கிறது.

பறவைக் குஞ்சுகளைச் சந்திக்கையில் அதே பழைய நட்பு. அடையாளமும் கிடைக்கிறது; நட்பும் தொடர்கிறது. 'வித்தியாசமாக இருக்கிறோம். நட்பாகவும் இருக்கிறோம்' (How can we be so different and feel so much alike) என்பது பறவைக் குஞ்சுகள் வெளிப்படுத்திய ஆச்சர்யம்.




இது பறவைகளின் குரலா? இல்லை. மானுடத்தின் குரல்!

**ஒ**ரு மனிதருக்கு எத்தனை அடையாளங்கள்? 'அவர் ஆசிரியர்' என்பது ஓர் அடையாளம். தொழில் சார்ந்த அடையாளம். 'இவருக்கும் உங்களைப் போல் ஏ.எம்.ராஜா பாடல் மீது உயிர்' என்றால் அது ஓர் அடையாளம். ரசனை சார்ந்த அடையாளம். 'சார்! நீங்க தேனியா? நானும் தேனிதான்!' என்றால் அது ஊர், வசிப்பிடம் சார்ந்த அடையாளம்.



ஒவ்வொரு மனிதருக்குள்ளும் அடையாளங்கள் ஏராளம்! அவ்வப்போது வெளிப்பட்டு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தரும் அடையாளங்கள்!

மனிதருக்குள் மிளிரும் பல அடையாளங்களை நீக்கிவிட்டு, சாதி அல்லது மதம் என்ற ஒற்றை அடையாளத்துக்குள் அவரை அடைப்பது மற்றவரிடம் இருந்து அவரைப் பிரிப்பதற்கு மட்டுமா? வெறுப்பை விதைத்து, சந்தர்ப்பம் பார்த்து அவரை வன்முறைக்குத் தூண்டவும்தான்!

ஆமார்த்யா சென்னுக்கு இப்போது வயது 90. காலம் பூராவும் மதப் பூசல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்து வருபவர் அவர். அவருடைய புத்தகங்களில் ஒன்று, 'Identity and violence'. புகழ்பெற்ற கல்வி நிலையங்களில் அவர் நிகழ்த்திய உரைகளின் தொகுப்பு இந்நூல். புத்தகத்தின் ஒவ்வொரு வரியிலும் அர்த்தம் இருக்கிறது; அன்பு இருக்கிறது.

ஒற்றை அடையாளம் (Solitarist) – பெரும்பாலும் மத அடையாளம்– வன்முறையின் அடையாளமாக மாறுவதை நூல் விவரிக்கிறது. விரிந்த மானுடம் 'மதம்' என்ற அட்டைப் பெட்டிக்குள் அடைபடுவதை விளக்கும் 'individuals are put into little boxes' என்ற அற்புதமான வரியை மறக்க முடியாது.

மனிதகுல அமைதிக்கான தாகம் ஆமார்த்யா சென்னிடம் இன்று நேற்று உருவானதல்ல. 1933–ல் வங்காளத்தில் பிறந்தவர் சென். 11 வயதில் (1944–ம் ஆண்டில்) இந்துக்களும் முஸ்லிம்களும் இந்திய மண்ணில் வெட்டிச் சாவதைக் கண்கூடாகக் கண்டு துடித்தவர். ஜனவரியில் தாயும் பிள்ளையுமாக இருந்தவர்கள், ஜூலையில் தூண்டப்பட்ட வன்முறை வலையில் சிக்கி முட்டி மோதுவதைப் பார்த்தவர். அமைதிக்கான தாகம் அன்று உருவானது.

ஆமார்த்யா சென் 1998–ல் பொருளாதாரத்திற்கான நோபல் நினைவுப் பரிசு பெற்றவர். 1999–ல் இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது பெற்றவர். குரலும் உடலும் தளர்ந்த நிலையிலும் அமைதி (Peace) குறித்துத் தொடர்ந்து பேசி வருபவர்.

**ப**டிப்போர் பெருகப் பெருக, சாதி மத அடையாளங்கள் நாளுக்கு நாள் கூர்மைப்பட்டு வருகின்றன – குறிப்பாக இந்தியாவில்! அப்படியானால், கல்வியின் பயன் என்ன? கல்விக்கூடங்களின் பயன் என்ன?

இந்த ஏமாற்றம் ஒரு பக்கம். 'மக்கு', 'புத்திசாலி', 'பணிவானவன்', 'நிமிர்ந்தவன்', 'சொன்ன பேச்சைக் கேட்பவன்', 'வசப்படாதவன்' – எனப் புதிய அடையாளங்களுக்குள் – அட்டைப் பெட்டிகளுக்குள் குழந்தைகளை அடைக்கிறது பள்ளி.

அபிப்பிராய அடையாளங்களை ஒட்டிக் குழந்தைகளை முடக்குவதற்கல்ல பள்ளி; குழந்தைகளுக்குள் ஒளிந்து கிடக்கும் அழகிய அடையாளங்களைக் கண்டுபிடித்துக் கொண்டாடத்தான் பள்ளி.

**(தொடர்ந்து பேசுவோம்...)**



# நெருக்கடியில் வெளிப்படும் வெறுப்பு!

சில சமயம் சூழ்நிலையே நமக்கு நெருக்கமான ஒருவரை நம் எதிரியாக எதிரில் கொண்டுவந்து நிறுத்திவிடுகிறது. ஒற்றை அறையில் இரண்டு நண்பர்கள் தங்கியுள்ளார்கள். ஒருவருக்கு நைட் ஷிப்ட் வேலை. அறையில் இருந்தபடி கம்ப்யூட்டரில் செய்வார். மற்றொருவருக்கு பகலில் வேலை.

அந்த ஒற்றை அறையில் இரவெல்லாம் விளக்கு எரிந்தே ஆகவேண்டும். ஒருவருக்கு விளக்கு தேவை. இன்னொருவருக்கு விளக்கு தூங்குவதற்குத் தடையாக இருக்கிறது. இந்நிலையில் சூழ்நிலையே நண்பர்களை எதிர் எதிரே நிறுத்துகிறது.

கணவனும் மனைவியும் வேலைக்குப் போகும் வீடுகளில், இருவருக்கும் ஒரு முக்கிய மீட்டிங் இருக்கும் நாளில் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாமல் போகும்போது யார் லீவு எடுப்பது என்ற குழப்பம் வரலாம். இருவரும் எதிரெதிரே நிற்க வேண்டிய சூழல் ஏற்படலாம்.

ஒரு தம்பதி. நான்கு வயதும் ஒரு வயதுமாக அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். கணவர் இரவெல்லாம் விழித்து காலை ஆறு மணி வரை தொடர்ச்சியாக அலுவலக வேலை செய்து கொண்டிருந்தார். பிறகு தூங்கப் போனார். மனைவியை இரவெல்லாம் குழந்தைகள் சரியாகத் தூங்க விடவில்லை. சேட்டை செய்துகொண்டும் அழுது கொண்டும் இருந்தன. அதனால் மனைவி காலையில் அசந்து தூங்கிவிட, குழந்தைகள் எழுந்து ரகளை செய்தன.

சத்தம்கேட்டுத்தூங்கப்போன கணவர் ஆவேசமாக வந்தார். “நான் நைட்டெல்லாம் வேலை செய்துட்டு தூங்கப் போனா இப்படி சத்தம் போடுறாங்க. நீ கவனிக்க மாட்டியா” என்று மனைவியிடம் கத்தினார். “நீங்க மட்டும்தான் தூங்கலியா? நானும்தான் தூங்கல” என்று பதிலுக்கு மனைவி கத்தினார். இருவரும் ஆவேசமாக வார்த்தைகளை வீசினர். அதில் சண்டை தீராமல், வீட்டில் உள்ள பொருட்களைத் தூக்கிப் போட்டு உடைத்தனர். அதில் குழந்தைகளுக்காக வாங்கி வைத்த பொம்மைகளும் அடக்கம்.

கணவர் தூக்கம் தொலைத்து ஆத்திரத்துடன் போய் அறைக்குள் முடங்க, மனைவி சோகத்துடன் இன்னொரு அறைக்குள் தனியாக அமர்ந்தார். தூங்காத சோர்வு, தன்னைப் புரிந்துகொள்ளாத கணவர் மேலுள்ள வேதனை, சோகம், பொம்மைகளை உடைத்த வேதனை, அவமானம் அனைத்தும் சேர்ந்து அவரை நிலைகுலைய வைத்தன.

இந்தச் சம்பவத்தில் கணவனுக்கும் இரவெல்லாம் தூக்கமில்லை. மனைவிக்கும் இரவெல்லாம் தூக்கமில்லை. இருவரும் கணவன் மனைவிதான். சிறந்த நண்பர்கள்தான். ஆனால் சூழ்நிலை இருவரையும் கடும் சண்டையிட வைத்து விடுகிறது. நெருக்கடியான சூழ்நிலையில் தொடர்ச்சியாக எப்படி நெருங்கிய உறவுகளைக் காயப்படுத்தாமல் இருப்பது?

மேற்படி சம்பவத்தை இன்னும் கொஞ்சம் ஆராயலாம்...

➲ கணவருக்குத் தூக்கமில்லை. காரணம், வேலைப்பளு. மனைவிக்கும் தூக்கமில்லை. காரணம், குழந்தைகளின் சேட்டை மற்றும் அழுகை. கணவருக்குத் தூக்கமின்மை கொடுத்த காரணி ஒரு முடிவு பெறும் காரணியா? ஆம், எவ்வளவு கடினமான வேலை என்றாலும் அது குறிப்பிட்ட சமயத்தில் முடிந்துவிடும். மனைவிக்குத் தூக்கமின்மை கொடுத்த காரணி ஒரு முடிவு பெறும் காரணியா? குழந்தைகள் எப்போது சேட்டையை அடக்கி தூங்கும் என்று சொல்ல முடியாது. அதிலும் இரண்டு குழந்தைகள் என்று வரும்போது அது முடிவில்லாத காரணிதான்.

➲ கணவருக்குத் தூக்கமின்மை கொடுத்த காரணியில் 'தொடரும் மனஅழுத்தம்' இருக்கிறதா? ஆம், இருக்கிறது. வேலை நேரம் முடிந்திருக்கலாம். ஆனால், வேலையில் காலக்கெடு தாண்டுவது போன்றவற்றால் மன அழுத்தம் ஏற்பட வாய்ப்பு அதிகம் உண்டு. மனைவிக்குத் தூக்கமின்மை கொடுத்த காரணியில் 'தொடரும் மன அழுத்தம்' இருக்கிறதா? இல்லை. குழந்தைகள் சேட்டையை நிறுத்தி அழாமல் இருந்தால், அம்மா தூங்கி சரியாகிவிடுவார். அவருக்குத் தூக்கமின்மை கொடுக்கும் காரணிகள் மேல் அவருக்கு 'தொடரும் மன அழுத்தம்' ஏதுமில்லை.

இதை இருவரும் புரிந்துகொண்டு அடுத்தவரை அணுகியிருந்தால், இப்பிரச்னை எளிதாக முடிந்திருக்கும். ஆறு மணி வரை வேலை செய்த கணவன் இன்னும் கொஞ்ச நேரம் விழித்திருந்து, "ஏன் அம்மாவைத் தொந்தரவு செய்றீங்க? இப்ப நான் உங்க கூட விளையாடுறேன்" என்று சொல்லி, மனைவியை ஒரு மணி நேரமாவது தூங்க வைத்திருந்தால், அவர் மறுபடி எழுந்து கணவரை எட்டு மணி நேரம் தூங்கவிட்டிருப்பார்.

அல்லது, "உங்களுக்கு வேலை முடிஞ்சாலும், நாளைக்கு வேலையை எப்படிச் செய்யணும், எப்படிச் சமாளிக்கணும்னு பிரஷர் இருக்கும்ல. தூங்குங்க. நான் சமாளிக்கிறேன். முடிஞ்சா இரண்டு மணி நேரம் கழிச்சி எனக்குத் தூங்க கொஞ்சம் டைம் கொடுங்க'' என்று மனைவி சொல்லியிருந்தால், ஒருவேளை கணவர் மனைவியை ஒன்றும் சொல்லியிருக்க மாட்டார்.



நமக்குப் பிடித்தவர்கள் மீது சூழ்நிலை காரணமாக எரிச்சல் ஏற்படும்போது, அவர் அனுபவிக்கும் குறைகளையும் கஷ்டங்களையும் கண்டு நாம் கவலைப்படுகிறோம், அக்கறைப்படுகிறோம் என்று லேசாகக் காட்டினாலே அவர் மனம் நிறைந்துவிடும். அங்கே பிரச்னை இல்லாமல் போய்விடும்.

இரவெல்லாம் விளக்கு வெளிச்சத்தில் வேலை செய்யும் நண்பர், மாதத்தில் இரண்டு நாட்கள் எதையாவது செய்து வேலையைச் சீக்கிரம் முடித்துவிட்டுத் தன் அறை கூட்டாளியிடம், "நீங்க நைட் தூங்க கஷ்டப்படுறது எனக்கும் கஷ்டமாத்தான் இருக்கு. அதான் வேலையைக் கொஞ்சம் சீக்கிரம் முடிச்சிட்டேன். இன்னைக்கு நைட் லைட் இருக்காது" என்று சொன்னால் அங்கே சூழ்நிலை கொடுக்கும் நெருக்கடியை எளிதாக முறியடிக்கிறார் என்று அர்த்தம்.

சூழ்நிலை காரணமாக நமக்குப் பிடித்தவர்களுக்கு நாம் செய்யும் வசதிக்குறைவை நாமும் உணர்ந்தே இருக்கிறோம் என்பதை அவருக்குப் புரிய வைத்துவிடுங்கள். அதைக் குறைக்க முடிந்தவரை முயற்சியும் எடுக்கிறோம் என்பதை செயலில் காட்டுங்கள். அந்தத் தொந்தரவிலிருந்து அவருக்குத் தற்காலிக விடுதலையாவது அவ்வப்போது கொடுங்கள்.

நமக்கு நெருக்கடி கொடுப்பவர்கள், அதை வேண்டுமென்றே கொடுக்கவில்லை, சூழ்நிலை காரணமாகவே கொடுக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அவர் எப்படி நடந்துகொண்டால் உங்களுக்குக் கொஞ்சம் வசதியாக இருக்கும் என்பதைப் பக்குவமாக அவருக்குச் சொல்லுங்கள். என்ன சூழ்நிலை, அதில் நமக்கு என்ன மனக்கஷ்டமும் உடல் கஷ்டமும் ஏற்படுகிறது, அதிலிருந்து இருவரும் எப்படி வெளியில் வரலாம். இப்படி அலசி ஆராய்ந்தால் தீர்வு கிடைக்கும்.

சூழ்நிலை நெருக்கடி வந்தவுடன் சட்டென்று சண்டை போட்டு கடுமையாகத் தாக்கிக்கொள்ள மாட்டோம். வெறுப்பையும் வேதனையையும் எரிச்சலையும் பரப்ப மாட்டோம். குடும்பம், நட்பு வட்டம் என்ற ஒட்டுமொத்த சுகங்களையும் நிரந்தரமாகத் தக்கவைப்போம்.

**– விஜயபாஸ்கர் விஜய்**



# கோடையில் மிரட்டும் மஞ்சள் காமாலை!

வெயில் சுட்டெரிக்க ஆரம்பித்தாலே கூடவே சில நோய்களும் ஊருக்குள் வந்துவிடும். பெரும்பாலும் கோடை நாட்களில் தண்ணீர்ப் பிரச்னை தலைவிரித்து ஆடும். வெளியூர் செல்பவர்கள் கையில் தண்ணீர் எடுத்துச் செல்லும் பழக்கம் இப்போது இல்லை. கிடைக்கும் தண்ணீரைக் குடிப்பவர்களுக்கு, அந்தத் தண்ணீராலேயே நோய்கள் வந்துவிடும். அப்படி வரும் முக்கியமான ஒரு பிரச்னை, மஞ்சள் காமாலை.

ஏதோ ஒரு வைரஸ் தொற்றால் நமது கல்லீரல் வீங்குவதைத்தான் மஞ்சள் காமாலை என்கிறோம். மது போன்ற வேதிப்பொருட்களால் கல்லீரல் பாதிக்கப்பட்டும் காமாலை வரலாம். கல்லீரல் முறையாக வேலை செய்யாதபோது, பைலிருபின் என்ற வேதிப்பொருள் உடலில் அதிகமாகி ரத்தத்தில் கலந்துவிடும். அதனால் சருமம், கண்கள் எல்லாமே மஞ்சள் நிறமாகும். எந்த வயதிலும் மஞ்சள் காமாலை வரலாம். ஆனால், குறிப்பாகப் பச்சிளம் குழந்தைகளுக்கும் முதியோருக்கும் அதிகம் வரும்.

மஞ்சள் காமாலையில், ஹெபாடைடிஸ் ஏ, பி, சி, டி, இ என ஐந்து வகைகள் உண்டு. சில சமயங்களில் மஞ்சள் காமாலையால் பெரிய ஆபத்து கிடையாது; அவை வந்து போவதுகூட நமக்குத் தெரியாது. சில நேரங்களில் கல்லீரலையே செயலிழக்க வைத்து உயிரைக் குடிக்கவும் செய்யும். ‘லிவர் சிரோசிஸ் மற்றும் கல்லீரல் புற்றுநோய் காரணமாக நிகழும் நிறைய மரணங்களுக்கு ஹெபாடைடிஸ் பி மற்றும் சி ஆகியவையே பெருமளவு காரணம்’ என உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது.

## ஐந்து வகை காமாலைகள்!

- அசுத்தமான தண்ணீராலும், உணவாலும் பரவுவது ஹெபாடைடிஸ் ஏ. இதில் நோயின் தாக்கம் குறைவாகவே இருக்கும். சிலருக்கு மட்டும் கடுமையான பாதிப்பு ஏற்பட்டு, உயிருக்கே ஆபத்தாகும்.
- ஒருவரின் ரத்தத்தில் இருந்து இன்னொருவருக்குப் பரவுவது ஹெபாடைடிஸ் பி. இந்த வைரஸ் பாதித்த ஒருவருக்குப் பயன்படுத்திய ஊசியை இன்னொருவருக்குப் பயன்படுத்தினாலோ, ரத்த தானம் செய்தாலோ பரவும். அம்மாவிடமிருந்து பச்சிளம் குழந்தைக்கும் பரவும்.
- இதேபோலவே ரத்தத்தின் மூலம் பரவுவது ஹெபாடைடிஸ் சி.
- ஹெபாடைடிஸ் பி தாக்கிய ஒருவருக்கே ஹெபாடைடிஸ் டி தாக்குதலும் நேரும். இரண்டும் இணைந்து தாக்கினால், மரணத்தின் விளிம்புக்கே செல்ல நேரும்.
- ஹெபாடைடிஸ் ஏ போலவே அசுத்தமான தண்ணீராலும் உணவாலும் பரவும் இன்னொரு வகை ஹெபாடைடிஸ் இ. இது ஒரே நேரத்தில் ஒரு பகுதியில் ஏராளமானவர்களுக்கு வரும்.

## என்ன காரணம்?

முன்பு சொன்ன காரணங்கள் தவிர, சில சமயங்களில் பிரசவச் சிக்கல்களாலும் காமாலை வரும். அதிகம் குடிப்பவர்களில் நான்கில் ஒருவருக்கு அதனால் கல்லீரல் பாதிக்கப்பட்டு காமாலை வரும். நோய் எதிர்ப்பு சக்திக் குறைபாடு, சில மருந்துகளை அதிகம் சாப்பிடுவது, கல்லீரலில் கட்டிகள் வருவது, உடலில் தாமிரம் அதிகம் சேர்வது, பித்தப்பை பாதிக்கப்படுவது, ரத்தச்சோகை, பித்தப்பை அல்லது கணையப் புற்றுநோய் போன்ற காரணங்களாலும் காமாலை ஏற்படும்.

## அறிகுறிகள் எவை?

ஆரம்பக்கட்டத்தில் எந்த அறிகுறியும் தெரியாது என்பதுதான் இதன் பிரச்னையே. நோய் தீவிரமடைந்த பிறகே உணர முடியும். சிறுநீர் மஞ்சள் நிறத்தில் வெளியேறுவது, எப்போதும் அதீத சோர்வு, குமட்டல் மற்றும் வாந்தி, அடிவயிற்றில் பிசைவது போல வலி, ஜுரம், உடலெங்கும் அரிப்பு, பசியின்மை, உடல் எடை குறைவது, மூட்டுக்கள் மற்றும் தசைகளில் வலி போன்றவை அபாய அறிகுறிகள்.

## எப்படிக் கண்டறிவது?

- கல்லீரல் வீங்கியிருப்பதை அழுத்திப் பார்த்தும், தோலின் நிறம் மாறியிருப்பதைப் பார்த்தும் டாக்டர் உணர்ந்துகொள்வார்.
- கல்லீரல் செயல்பாட்டுப் பரிசோதனை, வயிற்றில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், லிவர் பயாப்ஸி, வைரஸ் சீராலஜி சோதனை, பைலிருபின் அளவு போன்றவற்றில் உறுதி செய்யலாம்.

## எது ஆபத்து?

மஞ்சள் காமாலை நோயாளிகள், கீழ்க்காணும் அறிகுறிகள் இருந்தால், உடனே டாக்டரிடம் போக வேண்டும்...

- வாந்தி எடுக்கும்போது அதில் ரத்தமும் இருந்தால்
- காலைக்கடன் கழிக்கும்போது ரத்தம் சேர்ந்து வந்தால்
- எதையும் சாப்பிடவே முடியாத அளவுக்கு எல்லாமே வாந்தியாக வெளியேறினால்
- உங்கள் வேலைகளை இயல்பாகச் செய்ய முடியாத அளவுக்குக் குழப்பமாகவும் சோர்வாகவும் இருந்தால்



## எப்படித் தடுப்பது?

- ஹெபாடைடிஸ் ஏ மற்றும் பி ஆகியவற்றுக்கு தடுப்பூசிகள் உண்டு.
- ஷேவிங் ரேஸர் மற்றும் ஊசிகள் போன்றவற்றை யாரோடும் பகிர்ந்துகொள்ளக் கூடாது.



- சுகாதாரமற்ற உணவுகள் சாப்பிடுவதையும், கண்ட இடங்களில் தண்ணீர் குடிப்பதையும் தவிர்க்க வேண்டும். சரிவிகிதச் சத்துள்ள உணவு சாப்பிட வேண்டும்.
- டாக்டரின் ஆலோசனை இல்லாமல் கண்ட மாத்திரைகளை நீங்களாகவே சாப்பிடக் கூடாது.
- எப்போதும் உடல் சுத்தத்திலும், வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்வதிலும் அக்கறை காட்ட வேண்டும்.
- டாட்டு குத்திக் கொள்ளும்போதும், ஊசி போட்டுக் கொள்ளும்போதும் கவனம் வேண்டும்.
- குடிப்பவர்கள் அதைக் குறைக்க வேண்டும்; அல்லது நிறுத்த வேண்டும். ●



# தேர்ந்தெடுப்பதில் தெளிவு!

கதை உணர்த்தும் நீதி 13

செந்தில் ஜெகன்நாதன்

எந்த வயதில் நாம் இருந்தாலும் நமது அனைத்து நன்மைக்கும் தீமைக்கும் ஏதோ ஒரு வகையில் காரணமாக இருப்பவர்கள் நம் நண்பர்கள், மற்றும் நம்முடன் இருப்பவர்கள்.

நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் எவ்வளவு கவனத்துடன் இருக்க வேண்டும் என்பதற்குப் பல நீதிக்கதைகள் சொல்லப்பட்டிருந்தாலும் கரடகன் என்ற சிங்கம் தமனகன் என்ற சிங்கத்திற்குச் சொன்னதாக ஒரு கதை இருக்கிறது. அந்தக் கதையிலிருந்து நமக்குரிய நபர்களை எதை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்க வேண்டும் என நன்றாக விளங்கிக் கொள்ளலாம்.

இரத்தினபுரியின் அரசன் மிகுந்த கொடியவனாக இருந்தான். அதனால் அந்த நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றத் தீர்மானித்தான் அரசகுமாரன் ஒருவன். தன் கையிலிருந்த பணத்தில் பெரும் பகுதியைச் செலவழித்துப் பெரிய படை ஒன்றைத் திரட்டினான். மந்திரி குமாரனைத் தனக்கு மந்திரியாகவும், வியாபாரியின் மகனைப் பொக்கிஷக்காரனாகவும் நியமித்துக் கொண்டான்.

தான் திட்டமிட்டது போல் அந்நாட்டின் மேல் படையெடுத்து, அரசனைத் தோற்கடித்து, ஆட்சியைக் கைப்பற்றினான். பிறகு அந்நாட்டு அரசனாகத் தன்னை அரசகுமாரன் முடிசூட்டிக் கொண்டான்.

சிறிது காலம் போனது. அரசனுக்குப் பலவிதக் கேளிக்கைகளிலும் நாட்டம் வந்தது. தன் அரசின் பொறுப்பை மந்திரிகுமாரனிடமும், வியாபாரியின் மகனிடமும் ஒப்படைத்தான். தான் அந்தப்புரக் கேளிக்கையில் முழுக்க ஈடுபடத் தலைப்பட்டான் அரசகுமாரன்.

தன் அரண்மனைத் தோட்டத்தில் அநேகச் செல்லப் பிராணிகளை வளர்த்து வந்தான் அரசன். அவற்றுள் மனிதக் குரங்கு ஒன்றும் இருந்தது. அதன் மீது அரசனுக்கு மிகவும் பாசம் ஏற்பட்டது. அது அவன் சொன்னதையெல்லாம் கேட்டது. அதனால் அந்த மனிதக்குரங்கைச் சீக்கிரத்திலேயே தனக்கு மெய்க்காப்பாளனாகவும் ஆக்கிக் கொண்டான். மனிதர்களைப் போலச் சதி வேலைகளில் ஈடுபடாமல் தனக்கு விசுவாசமாக இருக்கும் என்று அதை நம்பினான்.

குளிர்காலம் முடிந்து வசந்த காலம் வந்தது. எங்கும் மலர்கள் பூத்துக் குலுங்கின. வண்டுகள் ரீங்காரமிட்டுப் பறந்தன. மரங்களின் தளிர்கள் மரகதமாய்ப் பிரகாசித்தன. வசந்த காலத்தில் ஒருநாள் தன் அரண்மனைத் தோட்டத்தில் இருக்கும் வசந்த மண்டபத்துக்குப் போனான் மன்னன். அனைத்தையும் பார்த்துக் களித்தான். பிறகு சற்றுக் களைப்பாயிருக்கவே, மண்டபத்துக்குள் சென்று படுத்துக் கொண்டான்.

அப்போது உடன் இருந்த மனிதக் குரங்கைப் பார்த்து, ‘‘யாரையும் உள்ளே விடாதே! நான் தூங்கப் போகிறேன். எவரும் என்னிடம் வந்து தொந்தரவு செய்யாதவாறு பார்த்துக்கொள்’’ என்று சொன்னான். ‘‘ஒருவரைக்கூட

உள்ளே விடமாட்டேன். நீங்கள் எவரது தொந்தரவுமின்றி ஆழ்ந்து தூங்கலாம்'' என்று சொல்லி, கத்தியை உருவிக் கையில் வைத்துக்கொண்டு காவல் காத்தது மெய்க்காப்பாளனான அந்த மனிதக் குரங்கு. அதன்பிறகு மன்னன் ஆழ்ந்து உறங்கியும் விட்டான்.

அப்பொழுது மன்னன் சூடியிருந்த நறுமலரின் வாசம் எங்கும் வீசியது. அந்த வாசத்தினால் கவரப்பட்ட வண்டு ஒன்று வந்து அரசன் தலையின் மேல் உட்கார்ந்தது. அதன் ரீங்காரத்தால், தூக்கத்திலேயே மன்னன் முகம் சுளித்தான்.

"என்ன தைரியம் இந்த வண்டிற்கு... நான் இங்கு இருக்கும்பொழுதே, அது உள்ளே சென்று அரசன் மேல் உட்காருகிறதே" என்று பலமாக முணுமுணுத்துக் கொண்டே, குரங்கு அந்த வண்டைத் துரத்தியது. வண்டு ஓடினாற் போல் ஓடி, மீண்டும் திரும்பி வந்து அரசன் கழுத்தில் உட்கார்ந்தது. மறுபடியும் மனிதக் குரங்கு அதைத் துரத்தியது. அந்த வண்டு பூக்களின் வாசத்தால் கவரப்பட்டு மீண்டும் திரும்பி வந்து அரசன் மேல் உட்கார்ந்தது.

இவ்வண்ணம் அடிக்கடி நடக்கவே, குரங்கிற்குக் கோபம் வந்துவிட்டது. உடனே தன் வாளைக் கொண்டு அந்த வண்டை ஓங்கி வெட்டிற்று. அந்த வெட்டு அரசனுடைய கழுத்தில் பட்டு, அக்கணமே அவன் உயிர் துறந்தான்.

அரசனது அலறலைக் கேட்டு, அரசி ஓடிவந்தாள் அங்கே. அக்கோரக் காட்சியைக் கண்டு அவள் தலையில் அடித்துக் கொண்டாள். ''ஐயோ! உன் மீது மிகவும் அன்பாக இருந்தாரே அரசர். அவரைப் போய் இப்படி ஏன் கொன்றாய்?'' என்று அந்தக் குரங்கைக் கேட்டாள். நடந்ததை விவரித்துக் கொண்டிருந்தபொழுதே படைவீரர்கள் ஓடிவந்து அக்குரங்கை வெளியே துரத்திக் கொன்றார்கள்.

'முட்டாள் நண்பனைக் காட்டிலும், அறிவுள்ள எதிரியே மேல்' என்பதை விளக்கவே இக்கதையைச் சொல்லிற்று கரடகன். இக்கதையை முடித்துவிட்டு மேலும் தான் சொல்லவந்த நீதியைத் தொடர்ந்தது கரடகன்.

'எவ்வளவுதான் தாகமாயிருந்தாலும், சாக்கடை நீரை யாரும் குடிப்பதுண்டா? உயிரை இழக்க நேர்ந்தாலும், செய்யத்தகாத காரியத்தை ஒருபோதும் செய்யலாகாது. நெருப்பும், மின்மினியும் ஒன்றே போல் தோன்றலாம். அதற்காக அவ்விரண்டும் ஒன்றாகிவிடுமா? நன்கு ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்; மற்றும் அரசியல் நெறி அறியாத மந்திரி கூறும் யோசனையை அரசன் அப்படியே எடுத்துக்கொள்வது கூடவே கூடாது' என்று சொல்லி முடித்தது கரடகன்.

இக்கதையின் நீதி நமக்கு உணர்த்துவது, மற்ற எல்லா விஷயங்களுக்கும் சரியான நபர்களைத் தேர்ந்தெடுத்த அரசன் மிக முக்கியமான தனது தனிப்பட்ட பாதுகாவலுக்கு ஒரு முட்டாள் குரங்கைத் தேர்ந்தெடுத்ததே அவனது அழிவுக்குக் காரணமாக ஆகிப்போனது.

'தெரிந்து தெளிதல்' என்ற அதிகாரத்தில்,

**'தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**

**தீரா இடும்பை தரும்'**

என்ற குறள் உள்ளது. 'ஒருவரைப் பற்றி ஆராயாமல் நம்புவதும், அப்படி ஆராய்ந்து நம்பியவர் மீது சந்தேகம் கொள்வதும் தீராத துன்பத்தையே தரும்' என்பது வள்ளுவர் குறிப்பிடும் நீதி.

'இவன் சரிவரமாட்டான்' என்பதில் சந்தேகமின்றித் தெளிவான முடிவெடுக்க வேண்டும். சரியான நபர்களின் நட்பின் துணைகொண்டு எத்தனை கடுமையான செயல்களையும் வெற்றிகரமாகச் செய்துவிட முடியும். ஆனால் தவறான அறிவிலிகளைக் கொண்டு சிறு காரியமானாலும் அதைச் செய்து முடிப்பது கடினமாகவே இருக்கும். ஆகவே நட்பைத் தேர்ந்தெடுப்பதிலும், உடன் பணியாற்றுபவர்களை, மனிதர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் நிதானமும் கவனமும் வேண்டும். ●



# வெளிச்சமாக இருந்து அதிர்ச்சி கொடு!



இரண்டு நாட்களாக தேவா இயல்பாக இல்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவம், அவள் மனத்தில் திரும்பத் திரும்ப வந்துகொண்டே இருந்தது.

அன்று தேவாவின் தோழி வித்யாவுக்குத் திடீரென்று பீரியட்ஸ் வந்தது. "நாப்கின் இருக்கிறதா" என்று அவள் கேட்க, தேவா தன் பையிலிருந்து நாப்கினை எடுத்து, மேலே உள்ள பிளாஸ்டிக் கவரைப் பிய்த்துவிட்டுக் கொடுத்தாள். வித்யாவின் அவசரம் கருதி அப்படிப் பிரித்துக் கொடுத்தாள். அந்த பிளாஸ்டிக் கவரை வகுப்பில் இருக்கும் குப்பைத் தொட்டியில் போட்டாள் தேவா.

அடுத்த வகுப்பு எடுக்க வந்த பிசிக்ஸ் மிஸ், ஏதோ குப்பையைப் போடும்போது அந்த நாப்கின் கவரைப் பார்த்து விட்டார். உடனே வகுப்பில் இருக்கும் பையன்களை எல்லாம் இன்னொரு அறைக்குப் போகச் சொன்னார். மாணவிகள் மட்டும் இருக்கும் வகுப்பறை கதவைச் சாத்தினார்.

''நாப்கினை இந்தக் குப்பைத் தொட்டியில் போட்ட முட்டாள் யாரு? அறிவே இல்லையா" என்று கோபமாகக் கத்த ஆரம்பித்து விட்டார். மாணவிகள் நடுங்கிவிட்டார்கள்.

"மிஸ், நான்தான் போட்டேன். அது யூஸ் பண்ணின நாப்கின் கிடையாது மிஸ். உள்ளே இருக்கற வெறும் கவர்தான். அவசரத்துல போட்டுட்டேன்" என்றாள் தேவா.

"நான்சென்ஸ். உனக்கு வெட்கமே இல்லயா?"

"மிஸ், நான் கவரைத்தானே போட்டேன்!"

"அப்ப அதை ஒரு ஃப்ரேம் போட்டு க்ளாஸ்ல தொங்க விடலாமா?" மிஸ் மீண்டும் கத்தினார்.

"நோ மிஸ்... நீங்க சொல்றது என்னை ஹர்ட் பண்ணுது. ஃப்ரேம் போட்டு மாட்டினாலும் அதுல தப்பே இல்லன்னுதான் சொல்வேன்!"

இதைக் கேட்டதும் மிஸ், அடிக்க வருவது போல தேவாவை நோக்கி ஓடி வந்தார். தேவா அசையாமல் நின்றாள். "ச்சீ, உனக்கு வெட்கமே கிடையாது" என்று கத்திவிட்டு வகுப்பை விட்டு வெளியேறினார் பிசிக்ஸ் மிஸ்.

மிஸ் வெளியேறிய அடுத்த நிமிடமே இரண்டு ஆயாம்மாக்கள் வந்து, "இங்க யாரு தேவா" என்று விசாரித்துவிட்டுக் குப்பைத் தொட்டியை எடுத்துப் போனார்கள். பிறகு பி.டி சார் வந்து, "யார் இங்க தேவா" என்று விசாரித்துப் போனார். வேறு இரண்டு மிஸ்கள் அந்த வகுப்பைக் கடந்து செல்லும்போது மெல்ல நடந்து உள்ளே உற்று உற்றுப் பார்த்தார்கள்.

தேவாவுக்கு நடந்த எல்லாமே அதிர்ச்சியாக இருந்தன. இதற்கிடையில் பையன்கள் வகுப்புக்குள் நுழைந்து, "என்ன ஆச்சு?" என்று கேட்டார்கள். 'தேவா

பிசிக்ஸ் மிஸ்ஸை எதிர்த்து பேசிட்டா' என்று தகவல் பரவியது. ஒரு குறும்புக்காரப் பையன், "தேவாவுக்கு டி.சி கொடுக்கப் போறாங்களாம்" என்று கொளுத்திப் போட்டான்.

"பிசிக்ஸ் மிஸ்கிட்ட போய் மன்னிப்பு கேளு" என்று சிலர் தேவாவிடம் சொன்னார்கள். "நான் செய்தது தப்பு இல்லை" என்று தேவா பதில் சொன்னாள்.

அடுத்த நாள் வந்த கணித ஆசிரியர் தேவாவிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. வழக்கமாக அவள் கணக்கைச் செய்யச் செய்ய உற்சாகப்படுத்துவார். ஆனால் அன்று அவர் அதைச் செய்யவில்லை. மதியத்துக்கு மேல்தான் தேவா கவனித்தாள். அவளுடைய நெருங்கிய நண்பர்களும் கூட அவளிடம் பேசாமல் விலகிச் சென்றனர். ஒன்றிரண்டு தோழிகளிடம், "ஏன் என்னை விட்டு விலகுகிறீர்கள்?" என்று கெஞ்சினாள். அவர்கள் பதிலே சொல்லவில்லை. அவளுக்கு அழுகை வந்தது.

வீட்டுக்கு வந்ததும் அம்மாவிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள். தேவாவின் அம்மா ஒரு கட்டடக் கலைஞர். எப்போதும் கட்டட வரைபடங்களை உருவாக்கிக்கொண்டே இருப்பவர். அவர் தேவாவைப் பார்த்து சிரித்து, "Steam Turbine பத்தி தெரியுமா? அது என்ன செய்யும்?" என்றார்.

தேவா பல்லைக் கடித்துக்கொண்டு பதில் சொன்னாள். "வேகமாக வரும் சூடான நீராவி, டர்பைனில் உள்ள காற்றாடியில் பட்டு காற்றாடி வேகமாக சுற்றும். அந்தச் சுற்றும் வேகத்தை ஒரு ஷாப்ட் கொண்டு கடத்தி ஒரு ஜெனரேட்டரைச் சுற்ற வைப்பார்கள். ஜெனரேட்டரில் இருந்து மின்சாரம் வரும்!"



"அந்த ஸ்டீம் டர்பைன் இருக்கு பாரு. அது சுத்தும்போது பயங்கர அதிர்வு இருக்கும். அந்த அதிர்வை நேரா பாத்தாத்தான் உனக்குப் புரியும், அந்த Vibration–னோட வேகம். அதனால என்ன பண்ணுவாங்க தெரியுமா? ஸ்டீம் டர்பைனுக்கு பவுண்டேஷன் போடும்போதே, அந்த டர்பைனைச் சுற்றி ஒரு இன்ச் அல்லது இரண்டு இன்ச் அளவுக்கு இடைவெளிவிட்டுதான் மற்ற வேலைப்பாடுகளைக் கட்டுவாங்க."

"மம்மி, இதுக்கும் என் பிரச்னைக்கும் என்ன சம்பந்தம் இருக்கு?"

"சொல்றேன் கேளு... தேவாங்கிற நீ ஒரு ஸ்டீம் டர்பைன் மாதிரி. நீ கரன்ட் கொடுக்கிற. இந்த உலகத்துக்கே வெளிச்சமா, சக்தியா கிடைக்கிற கரன்ட் உற்பத்தி பண்ற ஒரு ஆளு மாதிரி நீ. ஆனா பாரு, அந்த கரன்ட்டை உற்பத்தி செய்ய நீ அதிகம் Vibrate ஆக வேண்டியது இருக்கு. உனக்குச் சரின்னு நினைக்கற விஷயங்கள்ல உறுதியா இருந்து நீ கொடுக்கற அதிர்ச்சியை எல்லாராலயும் தாங்கிக்க முடியாது. உன்கூட ஒட்டிட்டே இருந்தா உன்னோட அதிர்வு அவங்களைத் தாக்கிருமோன்னு பயந்தே பலர் உன்னை விட்டு விலகி இருப்பாங்க."

தேவா மகிழ்ச்சி முகத்தோடு அம்மாவைப் பார்த்தாள். அவளுக்கு லேசாகப் புரிந்தது. அம்மா தொடர்ந்தார்.

"உன்னைவிட்டு விலகுன அனைத்து நட்புகளும் உன்னை வெறுத்து விலகுனவங்க இல்லை. அதை நீ புரிஞ்சிக்கோ. அவங்க உன்மேல பிரியமா இருக்காங்க. ஆனா உன் வைப்ரேஷன் மேல அவங்களுக்குப் பயம். அதனால உன்னை விட்டுக் கொஞ்சம் விலகி இருக்காங்க, அவ்ளோதான். அவங்க உன்னைவிட்டு விலகினாங்களே தவிர, ஒரு ஸ்டீம் டர்பைனா நீ உற்பத்தி செய்ற ஆக்கப்பூர்வமான கரன்ட்டை, நீ சமூகத்துக்குச் செய்ற நல்லதைப் பார்த்துட்டுதான் இருக்காங்க. உன்னைப் பாராட்டிட்டுதான் இருப்பாங்க. அதனால நீ தயங்காம எப்போதும் போல இரு!"

தேவா துள்ளிக் குதித்தாள். அவள் மனதில் இருந்த வேதனைகள் விலகின.

ஒரு மாதம் கழித்து அறிவியல் கண்காட்சிக்கான அறிவிப்பு வந்தது. அதன் தலைமைப் பொறுப்பாளர், பிசிக்ஸ் மிஸ். அவர் கூப்பிட்டதால், தேவா ஸ்டாப் ரூமுக்குச் சென்றாள். அங்கே பிசிக்ஸ் மிஸ் மட்டும் இருந்தார்.

"அன்னைக்கு நாப்கின் கவர் கிடந்ததுக்கு நான் ரொம்ப டென்ஷன் ஆகிட்டேன். அதுக்கு முதல்ல சாரி. ஆனா, நான் ஏன் டென்ஷன் ஆனேன் தெரியுமா?"

"மிஸ், எதுக்கு சாரி எல்லாம். சொல்லுங்க, ஏன்

டென்ஷன் ஆனீங்க?”

“நான் ஆறாவது படிக்கும்போதே ஏஜ் அட்டண்ட் பண்ணிட்டேன். என் நாப்கினை இப்படி ஒரு இடத்துல போட்டுட்டேன். பெரிய அக்கா ஒருத்தங்க அதைப் பாத்துட்டு ‘இந்த வயசுலேயே நீ சமஞ்சிட்டியாக்கும்’னு கிண்டல் செய்தாங்க. அதுக்குப் பிறகு எல்லா அக்காக்களும் அண்ணன்களும் என்னைக் கூப்பிட்டுக் கூப்பிட்டு கிண்டல் செய்துட்டே இருப்பாங்க. அதுக்குப் பயந்தே படிப்பை டிஸ்கண்டினியூ பண்ணிட்டு அடம் பிடிச்சி வேற ஸ்கூல்ல சேர்ந்தேன்.

அதுல இருந்து இப்பவரைக்கும் நான் பீரியட்ஸ் வர்றது பற்றியோ, அப்ப வர்ற பிரச்னைகள் பற்றியோ, யார்கிட்டயும் ஷேர் செய்ததே இல்ல. என் கணவருக்குக்கூடச் சொல்லமாட்டேன். சொன்னா அதை வச்சி ஏதாவது கிண்டல் செய்வாங்க. புரியுதா? அதனாலதான் அன்னைக்குக் குப்பைக் கூடைல அந்த கவர் கிடந்ததும் டென்ஷன் ஆகிட்டேன்” என்றார்.

“எனக்குப் புரியுது மிஸ், சாரி! ஆனா…” என தேவா இழுத்தாள்.

“சொல்லு தேவா!”

‘‘ஆனா இந்தப் பிரச்னைக்கு நாம பயந்து ஒடக்கூடாது. மென்சஸ்னா என்ன, அதோட வலி எப்படி இருக்கும், அதுக்குப் பின்னாடி உள்ள அறிவியல், அதை எப்படிப் புரிஞ்சிக்கணும்னு டீன் ஏஜ் ஆண்களுக்குச் சொல்லிக் கொடுக்கணும் மிஸ். அதைச் சொல்லிக் கொடுக்காம மறைக்க மறைக்க, அவங்களுக்கு மென்சஸ்ங்கிறது கேலியும் கிண்டலுமாதான் தெரியும். நாம மறைக்க மறைக்க நமக்குத்தான் கஷ்டம்.”

“நீ சொல்றதை நான் புரிஞ்சிக்கிட்டேன் தேவா. அதனாலதான் உன்னைக் கூப்பிட்டேன். இந்த தடவை அறிவியல் கண்காட்சியில் ‘மென்சஸ்’ பற்றிய விழிப்புணர்வுக் காட்சி பண்ணலாம். ஒரு டீன் ஏஜ் பையனுக்கு எப்படி இதைப் பத்திச் சொல்லிப் புரிய வைக்கலாம்னு ஒரு புராஜெக்ட் செய்து அறிவியல் கண்காட்சியில் நீதான் வைக்கிற, சரியா” என்றார் பிசிக்ஸ் மிஸ்.

“கண்டிப்பா நான் வைக்கிறேன் மிஸ். தேங்க்ஸ்” என்று சொல்லிவிட்டு வெளியே வந்தாள். தேவாவுக்கு உடனே கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. தன்னம்பிக்கையால் மேம்பட்டிருந்த தன் அழகு முகத்தைப் பார்க்க உடனே ஒரு கண்ணாடி இருந்தால் நன்றாயிருக்குமே என்று யோசித்துக் கொண்டு நடந்தாள் வகுப்புக்கு.

**– விஜயபாஸ்கர் விஜய்**


# உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

AGARAM FOUNDATION **யாதும்** நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

## சந்தாதாரர் ஆகுங்கள்!

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | | | |
| **முகவரி** | | | |
| **தொலைபேசி** | | **அலைபேசி** | |
| **மின்னஞ்சல்** | | | |

**டிக் செய்யவும்**

- ☐ **ஓர் ஆண்டு ரூ.240**
- ☐ **இரண்டு ஆண்டுகள் ரூ.450**

காசோலை / வரைவோலை மூலம் அனுப்பலாம். KARU CREATIONS என்ற பெயரில் செக் / டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

இப்படிவத்தை நிரப்பி செக் / டி.டி.யுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்:

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.
போன்: 99529 20801
email: contactyadhum@gmail.com

# ஆசையை இலக்காக மாற்றுங்கள்!



இலக்கை நிர்ணயித்து அதனை நோக்கிப் பயணம் செய்வோர், வெற்றிச் சிகரத்தைத் தொடுகிறார்கள். வெறும் ஆசையாக இருப்பது அப்படியே நிராசையாக மாறும். அதை இலக்காக மாற்றினால்தான் வெற்றி கிடைக்கும். 'நல்ல வேலைக்குப் போக வேண்டும்' என்பது வெறும் ஆசை. ஏதாவது ஒரு துறை அல்லது நிறுவனத்தைத் தேர்வு செய்து, 'இங்கே இந்த வேலையில் சேர வேண்டும்' என்று லேசாக மாற்றினால், அது ஓர் இலக்காக மாறிவிடுகிறது. இலக்குகளை நிர்ணயிப்பது ஒரு கலை. ஒவ்வொரு தனிமனிதரும், நிறுவனமும் இதைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான நுணுக்கங்களை எளிய உதாரணங்களோடு விளக்கமாகக் கற்றுக்கொடுக்கிறது, ப்ரையன் ட்ரேஸி எழுதிய 'கோல்ஸ்' என்ற நூல். 12 படிகளில் இலக்குகளைத் தீர்மானிக்கும் வழிமுறையை இந்த நூல் விளக்குகிறது. அந்த 12 படிகள்:

1. வாழ்வில் நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்கள்? அதைத் தெளிவாகத் தீர்மானித்துக்கொள்ளுங்கள். அதுதான் உங்கள் இலக்கு.
2. 'இது அடையக்கூடிய இலக்குதான்' என்று நீங்கள் முதலில் 100 சதவிகிதம் நம்பவேண்டும். 'இது கிடைக்குமோ, கிடைக்காதோ' என்று சந்தேகப்பட்டால், உங்களால் முழு ஈடுபாட்டுடன் உழைக்கவும் முடியாது. ஜெயிக்கவும் முடியாது.
3. உங்கள் மனதில் இருக்கும் இலக்கை ஒரு காகிதத்தில் எழுதி, அடிக்கடி கண்ணில் படுகிற இடத்தில் அதை ஒட்டிவையுங்கள். அது உங்கள் மனத்தில் ஆழமாகப் பதியட்டும்.
4. இந்த இலக்கை அடைவதற்கு எங்கேயிருந்து ஆரம்பிக்க வேண்டும்? அந்தத் தொடக்கப் புள்ளியைத் தீர்மானியுங்கள்.
5. இலக்கு இதுதான் என்று தீர்மானித்துவிட்டீர்கள். இப்போது, அந்த இலக்கு ஏன் உங்களுக்குத் தேவைப்படுகிறது என்று யோசியுங்கள்.
6. எந்த இலக்கிற்கும் ஒரு காலக்கெடு அவசியம். 'வீடு கட்ட வேண்டும்' என்பதைவிட 'இன்னும் ஐந்து ஆண்டுகளில் வீடு கட்டுவேன்' என்பது தெளிவான இலக்கு.
7. இலக்கை நோக்கிய பயணத்தில் என்னென்ன மாதிரியான தடைகள் வரக்கூடும் என்று யோசியுங்கள். அவற்றை எப்படி எதிர்கொள்வது என்று வழிகளைத் தேடுங்கள்.
8. தடைகள் வெளியே மட்டுமல்ல, உங்களுக்குள்ளும் இருக்கலாம். உங்களிடம் ஏதாவது திறமை குறைகிறதா என்பதைக் கவனித்துச் சரி செய்யுங்கள்.
9. இலக்கை அடைய உங்களுக்கு வழிகாட்டக்கூடிய அக்கறையான மனிதர்கள் யார் யார் என்று யோசியுங்கள். அவர்களிடம் உதவி கேளுங்கள்.
10. இலக்கைப் படிப்படியாகப் பிரித்து திட்டமிடுங்கள். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் வீடு கட்டுவது உங்கள் இலக்கு என்றால், 'இந்தத் தேதிக்குள் இடம் வாங்குவேன், இதற்கான பணத்தை இந்தத் தேதிக்குள் சேர்ப்பேன், இந்த வங்கியில் வீட்டுக்கடன் வாங்குவேன், அதைத் திருப்பிச் செலுத்த இதெல்லாம் வழிகள்'... இப்படி திட்டமிடுங்கள்.
11. இலக்கை எப்போதும் நினைத்துக்கொண்டே இருங்கள். அதை அடைந்துவிட்டால் உங்களுக்கு என்னவெல்லாம் கிடைக்கும் என்பதை யோசித்து யோசித்துப் பரவசப்படுங்கள்.
12. எப்போதும் நம்பிக்கை இழக்காதீர்கள். இலக்கை நோக்கிய பாதையிலிருந்து விலகாதீர்கள். அப்படி விலகினீர்கள் என்றால், நிஜமாகவே அது உங்கள் இலக்கு இல்லை என்று அர்த்தம். ●

பிரமிடுகள் என்றாலே எகிப்து நாடுதான் ஞாபகம் வரும். ஆனால், எகிப்தைவிட அதிகமான பிரமிடுகள் சூடானில் உள்ளன. நூபியன் நாகரிகக் காலத்தில் கட்டப்பட்ட இவை, எகிப்திய பிரமிடுகளைவிடப் பழைமையானவை.



பூகம்பம் வருவதை பாம்புகள் முன்கூட்டியே யூகித்துவிடுகின்றன. புற்றிலிருந்து நிறைய பாம்புகள் வெளியேறி அங்குமிங்கும் சுற்றித் திரிந்தால், சீக்கிரமே அந்தப் பகுதியில் பூகம்பம் வரும் என அர்த்தம்.

சைபீரியாவின் கடற்கரைகளில் மக்களே வசிக்காத பகுதியிலும் கப்பல் போக்குவரத்துக்காக கலங்கரை விளக்கங்கள் கட்டியிருக்கிறது ரஷ்யா. சரி, அவற்றுக்கு மின்சாரம்? அதற்காக மினி அணுமின் நிலையங்களை அங்கேயே அமைத்திருக்கிறார்கள்.

விலங்குகள் கொட்டாவி விடுவதைப் பார்த்திருப்பீர்கள். ஓர் உயிரினத்தின் கொட்டாவி, அதன் மூளை அளவைப் பொறுத்தது. பெரிய மூளை இருக்கும் விலங்குகள் நீண்ட கொட்டாவி விடுகின்றன.






திராட்சைப் பழத்தை அடிக்கடிச் சாப்பிடுவது, 43 வகையான மருந்துகளின் பக்கவிளைவுகளைக் குறைத்து நம்மைக் காப்பாற்றுகிறது.

ஆய்வுக்கூடங்களில் பல மருந்துப் பரிசோதனைகள் கினியா பன்றிகளை வைத்து நடத்தப்படுகின்றன. எலிகள் போலவே இருக்கும் இவை, கூட்டமாக வாழும் இயல்புள்ளவை. எனவே, சுவிட்சர்லாந்து நாட்டில் ஒற்றை கினியா பன்றியைத் தனியாக வளர்ப்பது சட்டவிரோதம்.

மைக்கேல் ஜாக்சன் தன் கைகளில் கருப்பு நிறத்தில் கையுறைகள் அணிந்தபடி நடனமாடுவார். அந்தக் கையுறை, கோல்ஃப் விளையாட்டு வீரர்கள் பயன்படுத்துவதைச் சற்றே மாற்றி உருவாக்கியதுதான்.



சேஃப்டி பின், தையல் இயந்திரம் என்று இப்போதும் பொதுமக்களுக்கு நேரடியாகப் பயன்படும் பல பொருட்களைக் கண்டுபிடித்தவர், வால்டர் ஹன்ட் என்ற அமெரிக்கர். ஆனால், தான் கண்டுபிடித்த எல்லாவற்றின் காப்புரிமையையும் சொற்ப விலைக்கு விற்றுவிட்டுக் கடைசிவரை வறுமையில் வாழ்ந்தார்.

33,330 அடி உயரத்திலிருந்து பாராசூட் இல்லாமல் விழுந்து உயிர் பிழைத்த ஒரே நபர், செர்பியா நாட்டின் வெஸ்னா யுலோவிச். 1972-ம் ஆண்டு குண்டுவெடித்து ஒரு விமானம் வானில் சிதறியபோது விழுந்து உயிர் பிழைத்தார். ஆனால், பல எலும்புமுறிவுகளுடன் பல மாதங்கள் மருத்துவமனையில் இருந்தார்.

சான் மரினோ என்று ஒரு நாடு. ஐரோப்பாவில் இத்தாலிக்குள் தனிநாடாக இருக்கிறது. வெறும் 61 சதுரகிலோ மீட்டர் பரப்பில் ஒரு நகராட்சி அளவுக்கு இருக்கும் இதுதான் உலகின் ஐந்தாவது சிறிய நாடு. சுமார் 34 ஆயிரம் பேர் வசிக்கும் இது, உலகின் பழமையான குடியரசுகளில் ஒன்று.



நம் எலும்புகள் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொஞ்சம் கொஞ்சமாகத் தங்களைப் புதுப்பித்துக்கொள்கின்றன. 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த எலும்பின் ஒரே ஒரு அணு கூட இப்போது இருக்கும் எலும்பில் இருக்காது.



கடைசியாக 1912-ம் ஆண்டில்தான் ஒலிம்பிக் தங்கப்பதக்கங்களை முழுவதுமாகத் தங்கத்தில் செய்தார்கள். அதன்பின் வெள்ளியில் செய்து தங்கமுலாம் பூசுகிறார்கள்.



டைனோசர்கள் தங்கள் உணவு செரிமானத்துக்கு உதவுவதற்காகப் பெரிய கற்களை அப்படியே விழுங்கிவிடும். அவை வயிற்றைக் கலக்கி, செரிமானத்தைத் துரிதமாக்கும்.

ஸ்டன்ட் நடிகர் ஜெட் லி, இளம் வயதில் சீன தேசிய குங்ஃபூ அணியில் இருந்தவர். அமெரிக்க அதிபர் நிக்ஸன் முன்னிலையில் குங்ஃபூ தற்காப்புக் கலையை நிகழ்த்திக் காட்டியபோது, தனது பாதுகாவலராக இருப்பதற்கு நிக்ஸன் அவரைக் கூப்பிட்டார். ஜெட் லி மறுத்துவிட்டார்.






ஆபிரகாம் லிங்கனுக்கு பூனைகள் என்றால் மிகவும் பிடிக்கும். அவர் காலத்தில் ஜனாதிபதி மாளிகையில் பூனைகள் நிறைய இருந்தன. ஒருமுறை வெள்ளை மாளிகை விருந்தின்போது, விருந்தினர்களுடன் டேபிளில் அமர்ந்தே பூனைகள் சாப்பிட்டன.

செக் மொழி வார்த்தையான ‘ரோபோடா’ என்பதிலிருந்தே ரோபோ என்ற பெயர், மனிதர்களின் வேலையைச் செய்யும் இயந்திரங்களுக்கு வந்தது. ‘ரோபோடா’ என்றால் கட்டாயத்தின் பேரில் வேலை செய்வது என அர்த்தம்.

கனடா எப்போது சுதந்திர அதிகாரம் பெற்ற நாடாக உருவானது என்பதற்கான வரலாறே அங்கு யாருக்கும் தெரியவில்லை. அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் இது தொடர்பாக ஒரு வழக்கை விசாரித்து, ‘1919 முதல் 1931’க்குள் சுய அதிகாரம் பெற்ற தனி நாடாக கனடா ஆனது’ என்று கூறியது.

2,000 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு, பிறக்கும்போதே ஒரு பல் இருக்கிறது.

# சமாதானம் செய்யும் கலை!



நீங்கள் ஒரு நிறுவனத்தில் வேலை செய்கிறீர்கள். உங்களது வாடிக்கையாளர் முரண்படும்போது, அவர்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து உங்கள் தரப்பு வாதத்தை எடுத்து வைத்து சமாதானம் செய்வதை ‘கன்வின்சிங்’ என்கிறோம். இது ஒரு விதமான பேச்சுத்திறன். நட்பு வட்டத்தில் எழும் பிரச்னை, வீட்டில் கிளம்பும் புயல் ஆகியவற்றைக் கூட இவர்களால் சமாளிக்க முடியும். இரு நாடுகளுக்கு இடையில் நடக்கும் போர்களைக் கூடத் தடுத்து நிறுத்த முடியும். கன்வின்சிங் திறன் மூலம் ஒரு நிறுவனத்தில் ஏற்படும் பிரச்னைகளை அவ்வப்போது சரிசெய்து சுமுகமான நிலையை உருவாக்க முடியும். இந்தத் திறன் கொண்ட ஊழியர்கள் மகிழ்ச்சியான அலுவலகச் சூழலுக்குக் காரணமாகின்றனர். இந்தத் திறனை வளர்த்துக்கொள்வதற்கான வழிகள் குறித்து விளக்கம் அளிக்கிறார், ரீச் அகாடமியின் நிறுவனர் மற்றும் கல்வியாளர் நஞ்சுண்டேஸ்வரன்.



மனிதர்கள் ஒன்றாக இணைந்து பணிபுரியும் நிறுவனங்களிலும், உறவுகளுக்கு இடையில் இனிமையாக வாழவும் இந்த கன்வின்சிங் திறன் அவசியம். இந்தத் திறன் கொண்டவர்களால் மட்டுமே தனக்குக் கீழே பணிபுரியும் பலவிதமான மனிதர்களை இணைத்து வழி நடத்த முடியும். மேலும் நிறுவனத்தில் சுற்றும் அரசியல் சூழல்களை எல்லாம் எளிதில் கையாள முடியும். இது மற்றவர்கள் மீது நிகழ்த்தப்படும் திறன் தூண்டுதல் ஆகும். இதை வெற்றிகரமாகச் செயல்படுத்த உங்களிடம் என்னென்ன இருக்க வேண்டும்?

**வற்புறுத்தும் திறன்:** இன்றைய இளம் தலைமுறையினர் தனக்கான தேவைகளுக்கே மற்றவரிடம் பேசத் தயங்குகின்றனர். அறிமுகம் இல்லாத நபரிடம் பொதுவான தகவலைக் கேட்கவும் வெட்கப்படுகின்றனர். ஒரு விஷயத்தைச் செய்ய வேண்டும் என்பதற்கு நியாயமான காரணங்கள் நம்மிடம் இருந்தால், அடுத்தவர்களை வற்புறுத்தியாவது அதைச் செய்துவிட வேண்டும். இன்றைய தலைமுறையினர் படிக்கும் காலத்தில் இருந்தே தமக்குத் தேவையான வேலைகளை மற்றவர்களிடம் வற்புறுத்திப் பெறும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**தூண்டுதல் திறன்:** நீங்கள் சொல்லும் விஷயத்தை அடுத்தவர்கள் செயல்படுத்த வேண்டும். அதற்கான தூண்டுதல் திறனையும் இன்றைய நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. விளம்பரத்தில் வரும் காட்சிகள், ஒரு

ரீச் அகாடமியின் நிறுவனர் மற்றும் இயக்குநர், கல்வியாளர்

**எஸ்.நஞ்சுண்டேஸ்வரன்**

பொருளை வாங்கிப் பார்க்கலாம் என்ற எண்ணத்தை உருவாக்குகின்றன. மோட்டிவேஷனல் ஸ்பீக்கராக இருப்பவர்கள், தமது வசீகரமான பேச்சாற்றலால் பலரது வாழ்க்கையை பாசிட்டிவாக மாற்றுகின்றனர். ஒரு ஆசிரியர் தன் மாணவர்களுக்குத் தூண்டுதல் அளிப்பதுடன், அவர்களை வற்புறுத்தியும் படிக்க வைக்கிறார். எந்த இடத்திலும் உற்பத்தித் திறனை மேம்படுத்த தூண்டுதல் திறன் அவசியம்.




**ஃபிரேமிங் செய்யுங்கள்:** நீங்கள் மற்றவர்களை கன்வின்சிங் செய்ய மூன்று முக்கிய விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். ஒரு புகைப்படத்தை எடுப்பதற்கு முன்னர் அதற்கான கோணம், ஒளியமைப்பு, அது வெளிப்படுத்த வேண்டிய உணர்ச்சி நிலை ஆகியவற்றை அந்த ஃபிரேமில் கொண்டு வர முயற்சி செய்வார்கள். நீங்கள் எதிர்பார்க்கும் வேலையைச் செய்வதற்கான சரியான நேரம் மற்றும் இடத்தைத் தேர்வு செய்யுங்கள். கவனமான வாதத்தை முன்வைக்கலாம். மிகவும் பொருத்தமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்கலாம். இப்படித்தான் உங்களது அணுகுமுறையை ஃபிரேமிங் செய்ய வேண்டும்.

**பலன்களைப் பகிருங்கள்:** ஒரு வேலையை மற்றவர் ஒப்புக்கொண்டு செய்ய வேண்டும் என்றால் அதில் உள்ள பலன்களை அவர்களுக்கு விளக்க வேண்டும். ஒரு குழுவை வழிநடத்தும்போது, அவர்கள் இலக்கை அடைவதால் என்னென்ன பலன்களைப் பெற முடியும் என்பதை விளக்கிவிட்டால் அவர்கள் வேகம் அதிகமாக இருக்கும். நீண்ட காலத்துக்கு அவர்களது வளர்ச்சிக்கு அது உதவியாக இருக்கும் என்பதைப் புரியவைப்பது தொடர்ந்து அவர்களை இயக்கும்.

**டேட்டாவைப் பயன்படுத்துங்கள்:** ஒரு முக்கியமான விஷயத்தைப் பகிர்ந்து கொள்ளும்போது அதற்கான புள்ளிவிவரங்கள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை முன்வைக்கலாம். உங்களது கருத்தைக் கேட்பவர் மனதில் அது பாசிட்டிவான நம்பிக்கையை ஏற்படுத்தும். நீங்கள் சொல்லும் விஷயங்களை அவர்கள் மனப்பூர்வமாகச் செயல்படுத்துவதற்கான வாய்ப்பு உண்டாகிறது. நீங்கள் ஒரு புதிய முயற்சியைத் தொடங்குவதாக இருந்தால் அதற்கான பைலட் திட்டத்தைச் செயல்படுத்துங்கள். இதன் மூலம் கண்டறியும் தரவுகளை ஆதாரமாக நீங்கள் பயன்படுத்தலாம்.

**குழுவாகச் செயல்படுங்கள்:** இன்றைய தலைமுறை இளைஞர்கள் மத்தியில் 'தான்' என்ற ஈகோ அதிகளவில் காணப்படுகிறது. விட்டுக் கொடுத்தல் மற்றும் அடுத்தவர் நிலையில் இருந்து யோசிப்பது மிகவும் குறைவாக உள்ளது. எப்பொழுதும் தன்னைப் பற்றியே யோசிப்பதால் தன் நிலையிலிருந்தே எதையும் அணுகுகின்றனர். நிறுவனங்களில் குழுவாகச் செயல்பட்டுப் பெரிய வெற்றிகளை எட்ட 'நான்' மற்றும் 'நீங்கள்' போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் 'நாம்', 'நாங்கள்' என்பது போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள். அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

**அதிருப்தியை அடையாளம் காணுங்கள்:** ஒரு நபர் குறிப்பிட்ட செயலில் அதிருப்தி அடைந்தால், அதற்கான காரணம் குறித்து அவர்களோடு பேசுங்கள். அவர்களின் பிரச்னைகளை உணர்ந்து தீர்வுகள் சொல்லி, அவர்கள் மனதை மாற்ற இது உதவும். இது உங்களுக்கும் அவர்களுக்குமான உறவை பலப்படுத்தி, அவர்களை பாசிட்டிவாகச் செயல்பட வைக்கும்.

**வழிகாட்டும் கேள்விகள்:** நீங்கள் ஒரு பொறுப்பை ஒப்படைக்கும் நபரிடம் அவர் அதனை வெற்றிகரமாக முடிப்பதற்கான கேள்விகளை முன்வைக்கலாம். இதன் மூலம் அவர்களுக்கு உண்டாகும் சந்தேகங்களைத் தீர்க்கலாம். நேரடியாக ஒரு செயலை வற்புறுத்துவதற்குப் பதிலாக இந்த நடைமுறையில் நுட்பமாக அவர்களுக்கு உணர்த்த முடியும். நீங்கள் கேட்கும் கேள்விகள் அவர்களுக்குள்ளும் பதில் தேட வைக்கும். இது சரியான புரிதலை உண்டாக்கும்.


**விருப்பங்களுக்கு மதிப்பளிக்கவும்:** நீங்களே எந்த விஷயத்திலும் 'ஆம்' அல்லது 'இல்லை' என்பதற்கு அவர்களது விருப்பத்துக்கு மதிப்பு கொடுக்கலாம். மற்றவர்கள் வேலையிலும் பதவியிலும் உயர்வதற்கு எந்த அளவுக்குத் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துங்கள். அப்போது அவர்கள் தன்நிலை உணர முடியும்.

**உரையாடலுக்கு முதன்மைப்படுத்தவும்:** எந்த ஒரு விஷயத்தையும் மறு பரிசீலனை செய்வது ஒரு நுட்பமாகும். ஒரு முடிவை எடுப்பதற்கு முன், அதற்கு ஒருவரைத் தயார்படுத்த உரையாடல் பயன்படுகிறது. உரையாடல் மூலம் யோசனையைக் குறிப்பிடுவது நல்ல பலன் அளிக்கும். நேர்மறையான விளைவுகளுடன் ஒரு கதையை இணைத்துச் சொல்லும் திறனும் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும்.

வாடிக்கையாளர்களைச் சமாதானப்படுத்தவும், பதவி உயர்வுகளைப் பெறவும், நேர்மறையான வேலைச்சூழலை உருவாக்கவும், சிறந்த வாய்ப்புகளை உருவாக்கவும் கன்வின்சிங் திறன் தேவைப்படுகிறது.

**– யாழ் ஸ்ரீதேவி**





# பள்ளியை இனிமை ஆக்குங்கள்!

முதன்முதலாகப் பள்ளிக்குச் செல்லும் குழந்தைக்கு மிரட்சியும், இனம் புரியாத அச்சமும் இருக்கும்.

எப்போதும் கூடவே இருந்த பெற்றோரைப் பிரிந்து தினமும் சில மணி நேரம் இருக்கப் போவது அவர்களுக்குப் புதிய அனுபவம். இது மிரட்சி தரும்! ஆனால், தன் வயதில் இருக்கும் விளையாட்டுத் தோழர்கள் ஏராளமாகக் கிடைப்பார்கள் என்ற புரிதல் அவர்களுக்கு நிம்மதி தரும். அவர்களுக்குப் பள்ளியை ஒரு இனிமையான, பாதுகாப்பான இடமாக அமைத்துத் தருவது எப்படி?

❖ எல்.கே.ஜி போக ஆரம்பித்ததுமே உங்கள் குழந்தை குறும்புத்தனத்தைத் தொலைத்துவிட்டுப் பொறுப்பாக மாற வேண்டும் என எதிர்பார்ப்பது தவறு. தீங்கு இல்லாத குறும்புகளைக் கண்டுகொள்ளாமல் விடுங்கள். குழந்தைகள் இந்த வயதில்தான் குறும்பு செய்ய முடியும். அது அவர்களின் இயல்பு. சும்மா இதற்காகப் பிள்ளைகளைப் பயமுறுத்தக் கூடாது. சேட்டை எல்லை மீறும்போது, “உங்க மிஸ் கிட்ட சொல்லி உன்னை உதைக்கச் சொல்றேன்'' என்கிற மாதிரிப் பேசக் கூடாது. அப்படிச் செய்தால் பள்ளிக்கூடம் என்பது தண்டனைக்கூடம் போலவும், ஆசிரியர்கள் எல்லாம் துன்புறுத்துபவர்கள் எனவும் குழந்தைகள் மனதில் பதிந்துவிடும்.

❖ படிப்பின் முக்கியத்துவம் பற்றி அந்த வயதிலேயே குழந்தையின் மனதில் விதை தூவுங்கள். “நீ படிச்சு பெரிய ஆளாகணும். டீச்சர்கள் எல்லோரும் அன்பானவர்கள். உன்னைப் பெரிய ஆளாக்குவதில் அவர்களின் பங்குதான் அதிகம்” என்று ஆசிரியர்களை இனிமையானவர்களாகக் காட்ட வேண்டும்.

❖ பிள்ளைகள் படிக்கும்போது நாமும் அவர்களோடு அமர்ந்து ஏதேனும் புத்தகங்கள் படிக்க வேண்டும். இப்படிச் செய்வதால் குழந்தைகளின் கவனமும் சிதறாது. படிக்கும் ஆர்வமும் அதிகமாகும்.

❖ நான்கு வயதிலேயே உங்கள் பிள்ளைதான் வகுப்பில் நம்பர் ஒன் ஆக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது. சில பாடங்களில் அவர்கள் பின்தங்கக் கூடும். ஏதோ எதிர்காலமே சூனியமாகிவிட்டது போல மிரட்டக்கூடாது. ஆசிரியர்களிடம் தனியாகக் கேட்டு, புரியாத பாடங்களைச் சொல்லித் தரச் செய்ய வேண்டும்.

# சுவாரசிய அதிகாரம்!

பள்ளி வாழ்க்கையில் இந்த ஜோக்கைக் கேட்டிருப்போம். ஒருத்தரிடம், ''கால்ல எப்படி அடிபட்டுச்சு?" என்று ஒருவர் கேட்டார். அதே நேரம் இன்னொருவர், "நீ எந்த ஊருக்குப் போகணும்?" என்று கேட்டாராம். இரண்டுக்கும் ஒரே பதிலாக அவர், "செங்கல் பட்டு" என்றார்.

இலக்கியத்தில் 'இருசொல் அலங்காரம்' என்று சொல்கிறார்கள். இரண்டு கேள்விகளுக்கு ஒரே பதில் சொல்ல முடிந்தால், அது இருசொல் அலங்காரம். மூன்று கேள்விகளுக்கு ஒரே பதில் வந்தால் அது 'முச்சொல் அலங்காரம்' எனப்படுகிறது. உ.வே.சா பதிப்பகம் 'இருசொல் அதிகாரம்; முச்சொல் அதிகாரம்' என்று ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள். இதனை இயற்றியவர்கள் நீலகண்ட வாத்தியார் மற்றும் புதுச்சேரி பிள்ளையப்பா. அதில் சுவாரஸ்யமான சில:

1. அச்சு வண்டி ஓடுவதேன்?

மச்சான் உறவாடுவதேன்?

**பதில்:** அக்காளைக் கொண்டு (அக் காளையைக் கொண்டு, அக்காவைக் கொண்டு).

2. அரக்கு பொன்னிறம் ஆவதேன்?

அனுமார் இலங்கைக்குப் போனதேன்?

**பதில்:** அரிதாரம் (சாயம், அரியின் தாரம் – சீதை அரியின் தாரம்தானே).

3. சந்தனம் சிறந்தது ஏன்?

சொந்த உறவு துறந்தது ஏன்?

**பதில்:** பூசலாலே (சந்தனம் பூசுவதாலே, சண்டையினாலே).

## முச்சொல்லுக்கு உதாரணம்:

மானிடர் அவயத்தில் சிறந்தது என்ன?

மாரிக்காலத்தில் தோன்றுவது என்ன?

மகராசர் சவுக்கியத்திற்கு விரும்பும் கருவி என்ன?

அம்பகம். (அம்பகம் என்றால் கண்; அம்பகம் என்றால் காளான்; அம்பு கூட்டல் அகம் – அம்புறாத்துணி)

**– விஜயபாஸ்கர்**

❖ பள்ளியில் மற்ற பிள்ளைகளுடன் அன்பும் நட்பும் பாராட்டும்படிச் செய்ய வேண்டும். குழந்தையின் படிப்பு, பழக்க வழக்கங்கள் பற்றி அடிக்கடி ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

❖ மற்றவர்களுடன் எப்படிப் பழகுவது எனக் கற்றுத்தர வேண்டும். இதனால் வளரும் சமூகப் பழக்கம்தான் எதிர்காலத்தில் அவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

❖ பள்ளியில் சக மாணவர்களுடன் போட்டி போடும்போது அது ஆரோக்கியமான போட்டியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும்.

❖ குழந்தையின் பள்ளிப் பையில், வீட்டு முகவரி, தொலைபேசி எண் அடங்கிய கார்டை வைத்து அனுப்ப வேண்டும். எதிர்பாராத குழப்பத்தில் ஏதாவது நேர்ந்தாலும், குழந்தை பத்திரமாக வீடு வந்து சேரும்.

❖ உங்களையோ,வழக்கமான ஆட்டோக்காரரையோ தவிர, வேறு முகம் தெரியாத நபர்கள் அழைத்தால் செல்லக்கூடாது என்று குழந்தைகளிடம் சொல்லிவைக்க வேண்டும்.

❖ பள்ளிக்குச் செல்லும்போது கண்டிப்பாகத் தங்க நகைகள் அணிவித்து அனுப்பக்கூடாது.

❖ ஒரு பொருளை எடுத்தால் எடுத்த இடத்தில் வைக்கப் பழக்க வேண்டும். இப்படிப் பழகிவிட்டால், காலை நேரப் பரபரப்பில், புத்தகம் எங்கே, பாக்ஸ் எங்கே, ஷூ எங்கே என்று ஆளுக்கு ஒரு பக்கம் தேடி பதற்றப்படத் தேவையில்லை.

❖ நம் கோபம், அவசரம், பதற்றம்... எதையும் குழந்தைகளிடம் காட்டக்கூடாது. குழந்தைகளிடம் பொறுமையும் கனிவும் மிகவும் முக்கியம்.

❖ சுத்தமாக இருப்பதும், சத்துள்ள உணவுகளைச் சாப்பிடுவதும் உடல் ஆரோக்கியத்தின் அடிப்படை என்பதைப் பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும். தினம் ஒரு காய், ஒரு பழம் உண்ணும் பழக்கத்தைச் சிறு வயதிலேயே ஏற்படுத்த வேண்டும்.

❖ அவர்களின் உடல், மனரீதியான பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். அவர்கள் சொல்வதைக் காது கொடுத்துக் கேளுங்கள். அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுங்கள்.

❖ உங்கள் தனிப்பட்ட ஆசைகளைத் திணிக்காமல், அவர்களின் ஆர்வத்தைக் கண்டறிந்து ஊக்கப்படுத்துங்கள். வெற்றி, தோல்வி... இரண்டுமே வாழ்க்கையின் அங்கமே என்பதைப் புரிய வையுங்கள்.

❖ அவர்களது நல்ல செயல்களை மனம் திறந்து பாராட்டுங்கள். அப்புறம் பாராட்டு வாங்குவதற்காகவே நல்ல பழக்கங்களை மேற்கொள்வார்கள். அவர்களை மற்றவர்களிடம் அறிமுகம் செய்யும்போது, அவர்களின் பெருமையான விஷயங்களையே கூறுங்கள். இது குழந்தைகள் மனதில் தன்னம்பிக்கையை விதைக்கும்.●


ஒவ்வொரு பெண்ணின் உள்ளும் ஒரு நிராகரிக்கப்பட்ட பெண் இருப்பாள் (ஆணுக்கும் இது பொருந்தும்). அந்த நிராகரிக்கப்பட்ட பெண்ணை மதிப்பதாக, ரசிப்பதாக, அன்பு செய்வதாக நம்பவைக்கும் ஆணை அவள் வெறித்தனமாக நேசிப்பாள். அவனுக்காக என்ன வேண்டுமானாலும் செய்வாள். இதைத் தந்திரமாகப் பயன்படுத்தி அவர்களை ஏமாற்றுகிறார்கள். இதைப் புரிந்துகொள்ள வைக்கிறது, ஈரானிய திரைப்படமான ‘Asphyxia’.


மசூத் என்பவன், தன் மனைவி நசிமை மனநல மருத்துவமனையில் சேர்க்கிறான். “நசிம் என் முறைப்பெண், வீட்டுக்கு ஒரே பெண், அவள் அப்பா இறந்த பிறகு என்னைத் திருமணம் செய்துகொண்டாள். இப்போது திடீரென்று வெறித்துப் பார்க்கிறாள், கத்துகிறாள்” என்கிறான். நசிமைக் கவனிக்கும் நர்ஸ் சாஹ்ரா, மிகுந்த பண்புள்ளவளாக இருக்கிறாள். நசிமிடம் அன்பாக நடக்கிறாள். “நீ எது வேண்டுமானாலும் என்னிடம் சொல். என்னை நம்பு” என்று கனிவுடன் சொல்கிறாள்.

இதற்கிடையில் மசூத் தன் மனைவி நசிமை தனியே பார்க்க வேண்டும் என்கிறான். அதுவரை அமைதியாக நசிம், ‘‘சாஹ்ரா! என் கணவன் மசூத் நல்லவன் இல்லை. என் சொத்து மீதுதான் மசூதுக்கும் அவன் அண்ணனுக்கும் அக்கறை. எப்படியாவது என்னைச் சீக்கிரம் சாகடிக்க இருவரும் திட்டமிடுகின்றனர். அதனால்தான் மனநிலை சரியில்லாதவள் போல் நடிக்கிறேன்’’ என்கிறாள். இதனால் நசிமை மசூத் சந்திக்கத் தடை போடுகிறாள் சாஹ்ரா.

சாஹ்ராவின் மொபைல் போனுக்கு அழைக்கிறான் மசூத். “நான் உங்கள் வீட்டுக்கு வந்து பேசுகிறேன்” என்கிறான். சாஹ்ராவோ, “இது முறை கிடையாது” என்று உறுதியாக மறுக்கிறாள். குடும்ப வறுமையால், திருமண வயது தாண்டியும் தனிமையில் இருக்கும் பெண் அவள்.

சிகிச்சையில் இருக்கும் நசிம் ஒருநாள் சாஹ்ராவிடம் உதவி கேட்கிறாள். “வரும் புதன்கிழமை என் வீட்டில் யாரும் இருக்க மாட்டார்கள். அப்போது வீட்டுக்குச் சென்று என் கைப்பை ஒன்றை ரகசியமாக எடுத்து வர முடியுமா?” என்கிறாள். நசிம் மேல் உள்ள அக்கறை காரணமாக, சாரா அதை ஏற்கிறாள். நசிம் வீட்டிக்கு ரகசியமாகச் செல்கிறாள். நசிமின் கைப்பையை எடுக்கிறாள். எடுத்துக்கொண்டு படியில் இறங்கி நடக்கும்போது மின்சாரம் தடைபடுகிறது. இருட்டில் தடுமாறி படியில் உருண்டு மயங்குகிறாள். அவள் மயக்கம் தெளிந்து விழிக்கும்போது, மசூத் அருகில் இருக்கிறான். அதிர்ச்சியில் சாஹ்ரா இருக்க, இங்கேதான் மசூத் தந்திரத்தைப் பயன்படுத்துகிறான்.






''கீழே விழுந்து விட்டீர்களா? உங்களுக்கு எங்கே அடிபட்டிருக்கிறது. நடக்க முடியுமா?'' என்று அன்போடு கேட்கிறான். "இந்தப் பையை நசிமிடமே கொடுத்து விடுங்கள். ஒன்றும் பிரச்னையில்லை. டாக்டரிடம் போகலாமா? உங்கள் கால் குணமாவது முக்கியம்'' என்கிறான். சாஹ்ராவுக்குள் இருக்கும் நிராகரிக்கப்பட்ட சாஹ்ரா நெகிழ்கிறாள். ஆத்திரப்பட அத்தனை காரணங்கள் இருக்கும்போதும் இவன் அன்பாகவும் கருணையாகவும் பார்க்கிறானே என்று நெகிழ்கிறாள். மசூத் அவளைக் கிட்டத்தட்ட அன்பால் வீழ்த்திவிடுகிறான்.

சாஹ்ரா போனை அங்கே விட்டுவிடுகிறாள். மருத்துவமனை போய் போனைத் தேடுகிறாள். போன் இல்லை. மசூத் எடுத்து வைத்துக்கொண்டு மிரட்டுவானோ என்று நினைக்கிறாள். ஆனால் மசூத் போனை அமைதியாக சாஹ்ராவிடம் கொடுக்கிறான். சாஹ்ரா மசூத்தை முழுமையாக நம்புகிறாள். அதன்பின் மசூத் சாஹ்ராவை தனக்குச் சொந்தமான ப்ளாட்டுக்கு வரச்சொல்கிறான். அங்கே சாஹ்ராவிடம் அவள் அழகாக இருப்பதாகச் சொல்கிறான். உணவு வாங்கி வந்து கொடுக்கிறான். ஒரு கைக்கண்ணாடியை எடுத்து சாஹ்ரா முன்னால் விரித்து, ''மேக்கப் போட்டுக்கொள். உனக்கு அழகாக இருக்கும்'' என்கிறான். வாழ்க்கை விரக்தியால் மேக்கப்பை தவிர்த்த சாஹ்ராவுக்கு, மசூத் இப்படிச் சொல்வது கிளர்ச்சியான மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அவன் அன்புக்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறாள்.

மசூத் இப்போது, "சாஹ்ரா, உன்னை நேசிக்கிறேன். உன்னை இதோ இந்த மோதிரம் போட்டுத் திருமணமும் செய்து கொள்கிறேன். நசிமின் அப்பா என் அப்பாவை ஏமாற்றிச் சேர்த்ததுதான் இந்தச் சொத்து அனைத்தும். அது எங்களுக்குச் சொந்தமானது. நசிம் பற்றி டாக்டர் ரிப்போர்ட் கேட்பார். அவள் நலம் என்று சொன்னால், நசிம் வெளிநாடு தப்பிவிடுவாள். அதனால் நசிம் மோசமாக இருக்கிறாள் என்று ரிப்போர்ட் கொடு'' என்கிறான். சாஹ்ரா அப்படியே செய்கிறாள்.

நசிம் அதன்பின் மருத்துவமனையிலிருந்து தப்பிவிடுகிறாள். ''இது மாதிரி மனநலம் குறைந்தவர்கள் வெளியே போனால் பெரும்பாலும் காரில் அடிபட்டு இறந்துவிடுவார்கள்'' என்று டாக்டர் கத்துகிறார். அப்போது சாஹ்ராவுக்கு போன் வருகிறது. நசிம் கூப்பிடுகிறாள். "நான் ப்ளாட்டில் மறைந்திருக்கிறேன், வா'' என்கிறாள். சாஹ்ரா அங்கு போனதும், 'தான் தப்பி வெளி நகரத்தில் இருக்கும் வக்கீல் வீட்டுக்குப் போவதாகவும், பின் வெளிநாடு சென்று அங்கிருந்து தன் சொத்துக்களை விற்று விடுவதாகவும்' சொல்கிறாள்.

"சாஹ்ரா, என்னை இந்த நகரத்தை விட்டு வெளியே கொண்டு போ'' என்று காரில் உட்காருகிறாள். சாஹ்ரா கார் ஓட்ட, நசிம் கார் கதவில் தலை சாய்த்துத் தூங்குகிறாள். மசூத்தின் தந்திர அன்பில் மயங்கியிருக்கும் சாஹ்ரா, சட்டென்று கார் கதவைத் திறந்து நசிமை வெளியே தள்ளிவிடுகிறாள். நசிம் சாலையில் விழ, ரிவர்ஸில் காரைக் கொண்டு வந்து நசிம் மேலே ஏற்றிச் சிதைக்கிறாள்.

அங்கே வரும் மசூத், ''ஏன் நசிமைக் கொன்றாய்'' என்று சாஹ்ராவைத் தாக்குகிறான். "உனக்காகத்தானே இதைச் செய்தேன்'' என்கிறாள் சாஹ்ரா. அவளைத் தன் ப்ளாட்டுக்குப் போகச் சொல்கிறான். சாஹ்ரா ப்ளாட்டில் காத்திருக்கிறாள். மசூத் அங்கே லிப்ட்டை கன்ட்ரோல் செய்யும் அறைக்குச் செல்கிறான். சாஹ்ராவிடம் ''கீழே வா'' என்று போனில் சொல்கிறான். அவள் லிப்டில் கீழே வரும்போது மின்சாரத்தைத் துண்டிக்கிறான். சாஹ்ராவுக்கு இருட்டு என்றால் பயம். அந்தப் பயத்தால் மூச்சு முட்டும் Asphyxia என்ற ஆக்ஸிஜன் குறைவாக எடுத்துக்கொள்ளும் விளைவு வரும் என்று சொல்லியிருக்கிறாள். அதைத் தெரிந்து மசூத் சாஹ்ராவை வீழ்த்துகிறான். சாஹ்ராவிடம் தந்திர அன்பு செலுத்தி அவளை வைத்து நசிமை வீழ்த்தி, பின் சாஹ்ராவையும் வீழ்த்தி அனைத்துச் சொத்தையும் அடைகிறான்.

மனிதனின் உளவியலை ஆராயும் இப்படத்தைப் பார்த்தால், எப்படி உணர்வுகளைத் தந்திரமாக மனிதர்கள் பயன்படுத்துவார்கள் என்ற விழிப்புணர்வை அடையலாம்.

**– விஜயபாஸ்கர் விஜய்**

## ஒரே பாடம்... ஒரே தேர்வு!

தமிழகப் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் ஒரே பாடத்திட்டம்... ஒரே நேரத்தில் தேர்வு என்ற முறை வரப் போகிறது. தமிழகத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இணைப்பு பெற்றுள்ள 19 பல்கலைக்கழகங்கள் உள்ளன. இவற்றின் துணைவேந்தர்களுடன் தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனைக்குப் பின் பேசிய அவர், "மொழிப் பாடத்தில் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் ஒரே பாடத்திட்டம் இருக்க வேண்டும் என்று துணைவேந்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது" என்றார்.

இதன்படி, முதல் இரண்டு பருவங்களில், தமிழ் இலக்கிய வரலாறு மற்றும் தமிழ் இலக்கியங்கள் பாடங்களாக நடத்தப்படவுள்ளன. மூன்றாவது பருவத்தில் தமிழர்கள் வரலாறும் பண்பாடும் என்ற பாடம் முதல் பகுதியாகவும், நான்காவது பருவத்தில் தமிழும் அறிவியல் வளர்ச்சியும் என்ற இரண்டாவது பகுதியும் நடத்தப்படவுள்ளது. அதேபோல், இந்த நான்கு பருவங்களிலும் ஆங்கில மொழிப்பாடமும் கட்டாயமாகப் படிக்க வேண்டும். மொழிபெயர்ப்பு மற்றும் இலக்கணமும் இந்தப் பாடத்திட்டத்தில் கொண்டுவரப்படும். இந்த மொழிப்பாடங்கள் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஒரே மாதிரி இருக்கும்.



அதேபோல் மற்ற பாடங்களுக்கான உயர்கல்வித் துறையின் பாடத் திட்டங்கள் அனைத்து துணைவேந்தர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அந்தப் பாடத்திட்டத்தில், அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்பச் சில மாற்றங்கள் செய்துகொள்ளலாம். ஆனால், இந்தப் பாடத்திட்டத்தை 75 சதவிகிதம் முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

அடுத்த கல்வி ஆண்டு முதல், அனைத்து பல்கலைக்கழகங்களிலும் ஒரே நேரத்தில் தேர்வு நடத்தி முடிவுகள் வெளியிடப்படும். ஒரே தேர்வு, ஒரே நாளில் முடிவு, ஒரே நாளில் உயர்கல்வி சேர்க்கை ஆகிய அனைத்தும் அமலுக்கு வரும்.

## ஏமாற வேண்டாம்!

மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்கள் வழியாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன. இவையெல்லாம் உரிய மாணவரின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கில் நேரடியாகப் பணமாகச் செலுத்தப்படுகிறது. இந்தத் திட்டங்களின்படி உதவித்தொகைக்குத் தகுதியானவர்களைப் பள்ளிகளே கண்டறிந்து, உரிய இயக்குநரகத்திற்குப் பட்டியல் அனுப்பப்படும். இதைத் தாண்டி மத்திய அரசின் கல்வி உதவித்தொகைக்கான இணையதளத்தில் உள்ள சில திட்டங்களுக்கு மாணவர்கள் நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

சமீப காலமாக பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 தேர்வில் 80 சதவிகிதத்திற்கும் மேல் மதிப்பெண் எடுத்தவர்களுக்கு முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பெயர்களில் கல்வி உதவித்தொகை இருப்பதாக, வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் தகவல் பகிரப்படுகிறது.



'இந்தத்திட்டத்தைபிரதமர் மோடி அறிவித்துள்ளார். பலருக்குப் பகிர்ந்தால், தகுதியுள்ளோர் பயனடைவர்' எனவும் குறிப்பிடுவதால், பலரும் நம்பி ஷேர் செய்கிறார்கள். இதைப் பார்த்துவிட்டு விண்ணப்பங்கள் எங்கு கிடைக்கும் எனப் பலரும் விசாரித்து தடுமாறுகின்றனர். "இதை வைத்து மோசடிப் பேர்வழிகள் மக்களை ஏமாற்றவும் வாய்ப்புள்ளது. சமூக ஊடகங்களில் வரும் இதுபோன்ற தகவல்களை நம்ப வேண்டாம், யாருக்கும் பகிரவும் வேண்டாம்" என்கிறார்கள் கல்வி அதிகாரிகள்.

# உயர்கல்வி வேறுபாடு!



உயர்கல்விக்கான அகில இந்திய ஆய்வு (AISHE) சார்பில் 2020–21க்கான கணக்கெடுப்பு விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மத்திய கல்வி அமைச்சகத்தின் இந்த AISHE கணக்கெடுப்பின்படி, 2020–21ல் உயர்கல்வி பயிலும் இஸ்லாமிய மாணவர்கள் 8% குறைந்துள்ளனர். அதே நேரத்தில், ஓபிசி பிரிவு 4 சதவிகிதம், எஸ்சி பிரிவு 4.2 சதவிகிதம், எஸ்டி பிரிவு 11.9 சதவிகிதம் உயர்ந்துள்ளது. பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து உயர் கல்வி பயிலச் சென்ற இஸ்லாமிய மாணவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 79 ஆயிரம் மட்டுமே.

உத்தரப்பிரதேசம், ஜம்மு காஷ்மீர், மகாராஷ்டிரா மற்றும் தமிழகத்தில் இந்தச் சரிவு அதிகம். உத்தரப்பிரதேசத்தில் உயர்கல்வி நிறுவனங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இருந்தும் அங்கு இஸ்லாமிய மாணவர்களின் சேர்க்கை விகிதம் குறைந்துள்ளது. கேரளாவில் மட்டுமே இஸ்லாமிய மாணவர்களின் உயர்கல்வி விகிதம் 43% என்ற நல்ல நிலையில் உள்ளது. இந்தியாவில் இஸ்லாமியர்களின் விகிதம் 14% ஆக உள்ள போதிலும், உயர்கல்வி பயிலும் இஸ்லாமியர்கள் 4.6 சதவிகிதம் மட்டுமே! ஆச்சரியம் தரும் விஷயமாக, இஸ்லாமிய ஆண்களைவிடப் பெண்கள் அதிக எண்ணிக்கையில் உயர்கல்வி பயில்கிறார்கள்.




# கல்விக்கடனை நிராகரிக்கக்கூடாது!

சிபில் ஸ்கோர் (CIBIL Score) என்பது ஒரு நபரின் கடன் வரலாற்றைத் தெரிந்துகொள்ள உதவுகிறது. ஒரு நபர் கடன் வாங்கி அதைச் சரிவரச் செலுத்தி வந்தால் சிபில் ஸ்கோர் நல்ல அளவில் இருக்கும். கடனைச் சரியாகச் செலுத்தவில்லை என்றால் சிபில் ஸ்கோர் குறையும். ஒருவரின் சிபில் ஸ்கோரைப் பார்த்துவிட்டே, அவருக்குக் கடன் வழங்குவது குறித்து வங்கிகள் முடிவு செய்கின்றன.

இந்நிலையில், பெற்றோரின் சிபில் ஸ்கோர் குறைவாக இருக்கிறது என்பதற்காக ஒரு மாணவரின் கல்விக்கடன் விண்ணப்பத்தை நிராகரிக்க முடியாது எனக் கேரளா உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து உயர் நீதிமன்றம், “நாளைய நாட்டைக் கட்டமைப்பவர்கள் மாணவர்கள். இந்த நாட்டை எதிர்காலத்தில் வழிநடத்தப் போவது அவர்கள்தான். கல்விக்கடனைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு அவர்களுடையதுதான் என்பதால், பெற்றோரின் கடன் வரலாற்றைப் பார்த்து அவர்களுக்குக் கடன் மறுக்கக்கூடாது” என்று தெரிவித்துள்ளது.

இந்த வழக்கைத் தொடர்ந்த மாணவரின் பெற்றோர் இதற்கு முன் இரண்டு கடன்கள் வாங்கியுள்ளனர். அதில் ஒரு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மற்றொரு கடனில் 16,667 ரூபாய் தாமதமாகச் செலுத்தப்பட்டுள்ளது. இதனால் அவர்களின் சிபில் ஸ்கோர் பாதிக்கப்பட்டுள்ளது. இதைக் காரணம் காட்டியே அந்த மாணவருக்கு கல்விக்கடன் மறுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அவர் வழக்குப் போட்டார். அந்த மாணவருக்குப் படித்து முடித்ததும் பன்னாட்டு நிறுவனத்தில் வேலை வாய்ப்பும் உறுதியாகியுள்ளது. எனவே, அந்த மாணவர் படிக்கும் கல்லூரிக்கு ரூ.4,07,200 கல்விக்கடன் தொகையைச் செலுத்தும்படி வங்கிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.





# நம் பெண் கல்விக்கு உதவிய சிறு அணில்!

பெண் கல்வி என்பது கடந்த நூற்றாண்டு நமக்குத் தந்த பெரும் பரிசு. பெண்கள் படிக்கத் தொடங்கிவிட்டால் வீடுகளைக் 'கவனிக்க' யாரும் இருக்கப் போவதில்லை என்ற ஆணாதிக்க மனநிலை இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக விஷம் போலப் பரவியிருந்தது. திண்ணைப் பள்ளிகளில் ஆண் குழந்தைகளும், வீடுகளிலேயே பெண் குழந்தைகளும் தொடக்கக் கல்வி என்ற இந்திய வழிக் கல்வி கற்ற காலத்தில், 1711–ம் ஆண்டு தமிழகத்தில் கால் பதித்த சீகன்பால்கு, பெண்களுக்கான முதல் பள்ளியைத் தரங்கம்பாடியில் நிறுவினார். அதையடுத்தே ஆங்கிலேயர், ஆதரவற்று விடப்பட்ட தங்கள் பெண் குழந்தைகளின் கல்விக்கெனவும், போர் வீரர்களின் மகன்களுக்கெனவும் 1715–ம் ஆண்டு புனித ஜார்ஜ் கோட்டைக்குள் முதல் பள்ளியைத் தொடங்கினார்கள். ஆண்களுக்கு ஆங்கிலமும் கணக்கும், பெண்களுக்கு வாசிப்பும் வீட்டு நிர்வாகமும் இந்தப் பள்ளியில் சொல்லித் தரப்பட்டன.

1813–ம் ஆண்டு மிஷனரிகள் குடும்பம் குடும்பமாகத் தமிழகத் துறைமுகங்களில் வந்திறங்கினர். விளைவு: மிஷனரி மனைவிகள் நடத்திய எக்கச்சக்கமான பள்ளிகள். இந்தப் பள்ளிகளில் வேதாகமம் படிப்பது கட்டாயமாக இருந்தது. தலைமுறை தலைமுறையாக சைவமும் வைணவமும் கடைப்பிடித்த மக்கள் குழப்பத்துக்குள்ளானார்கள்.

உதாரணத்துக்கு நாகர்கோவில் பகுதியில் முதல் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கி நடத்திய மிசஸ் மால்ட் என்ற மிஷனரி மனைவி, தன்னிடம் பள்ளியில் பெண் குழந்தை ஒன்றைக் கொண்டுவந்து சேர்ப்பவர்களுக்கு ஓரணா கமிஷனாக வழங்கினார். பள்ளிக்கு வந்த பெண்கள் தையல், பூப்பின்னல்




கற்றுக்கொண்டனர். ஆனால் அதற்கு முன் புதிய வேதாகமத்தை அவர்கள் மனப்பாடம் செய்வது கட்டாயமாக்கப்பட்டது. வேதாகமம் பற்றிய அறிவின்றி அவர்களுக்குக் கல்வி தரப்படவில்லை. 'குப்பாயம்' என்ற மேல்சட்டை இந்தப் பெண்களுக்கு அளிக்கப்பட்டதே பெரும் விடுதலையாக எண்ணி மால்ட் அம்மையாரிடம் வந்து சேர்ந்தார்கள் மேலாடை அணிய அனுமதி மறுக்கப்பட்ட திருவிதாங்கூர் சமஸ்தானப் பெண்கள்! இவர்கள் தைத்த திருவிதாங்கூர் லேஸ் இங்கிலாந்தில் பேல் கணக்கில் விற்பனையானது; உழைப்புக்கேற்ற ஊதியமும் இவர்களுக்குக் கிடைத்தது.

மிஷனரிகள் கணிதம், வாசிப்பு, எழுத்து, சுயதொழில் செய்ய ஏதுவாகப் பூத்தையல், லேஸ் வேலைப்பாடு என்று கற்றுத்தந்தாலும், மதம் மாற மனமற்ற குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு கல்வியறிவு சென்று சேரவில்லை. 1822–ம் ஆண்டு இதுகுறித்து எழுதும் மன்றோ துரை, 'பிராமணர் மற்றும் வணிகர் போன்ற உயர்சாதிகளைத் தவிர பிற சாதியினருக்குப் பெண் கல்வி என்பது எட்டாக்கனியாக இருக்கிறது' என்று கவலை தெரிவிக்கிறார். 1854–ம் ஆண்டு சார்லஸ் வுட் தன் 'வுட்ஸ் டெஸ்பாச்' என்னும் அறிக்கையை மாகாண அரசுக்கு அளிக்கிறார். அதில் மதராஸ் மாகாணத்தில் 256 பெண்கள் பள்ளிகள் இருக்கின்றன என்றும் அவற்றில் 8,000 பெண்கள் படிக்கிறார்கள் என்றும் கணக்கு தருகிறார். அதன்பின் வந்த 'ஸ்டான்லி டெஸ்பாட்ச்', பெண்கள் பள்ளிகளின் போதாமையைச் சுட்டுகிறது. 1868–ம் ஆண்டு தான் மாகாணத்தின் ஒவ்வொரு ஊரிலும் ஒரு பெண்கள் பள்ளியை அரசே தொடங்கும் என்று முடிவானது. 1870–ம் ஆண்டு மகளிர் பயிற்சிக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன.

அப்போது பெண்களுக்கான தனிப் பள்ளிகளும், அரசுப் பள்ளிகளும், பயிற்சிக் கல்லூரிகளும் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருக்க, அவற்றின் பணியை நிர்வகிக்கச் சரியான நபர் ஆங்கிலேய அரசுக்குத் தேவைப்பட்டார். 1881–ம் ஆண்டு மாகாண பயிற்சிப் பள்ளியில் முதல்வராக இருந்த இசபெல் பிராண்டர் என்ற பெண்மணியை நாட்டின் முதல் 'பெண்கள் பள்ளிகளின் இன்ஸ்பெக்டிரஸ்' என்ற பதவியை உருவாக்கி அமர்த்தியது அரசு.

'கிண்டர்கார்டன்'. இந்தச் சொல்லை நாம் அனைவரும் கேட்டிருப்போம். அதிகம் உச்சரித்தும் இருப்போம். விளையாட்டு மற்றும் செயல்வழிக் கல்வியைச் சிறு வயது முதலே குழந்தைகளுக்கு, குறிப்பாகப் பெண் குழந்தைகளுக்கு வழங்குவதுதான் இந்தக் கல்விமுறையின் நோக்கமாக இருந்தது. இதை வடிவமைத்த ஃப்ரீட்ரிக் ஃப்ரோபல், குழந்தைகளுக்கு '3 ஆர்'கள் மிக முக்கியமானவை என்று கருதினார். வாசிப்பு, எழுத்து மற்றும் கணிதம் ஆகியவையே மூன்று ஆர்கள். இந்த மூன்றையும் சரிவரச் செய்யும் குழந்தைகளுக்குக் கம்பளியில் செய்யப்பட்ட பந்துகள், கூம்புகள், கன சதுரங்கள் போன்றவை 'ஃப்ரோபல் பரிசுகள்' என்று அளிக்கப்பட்டன. வீடுகளில் உள்ள 3–6 வயதான இளம் பருவப் பிள்ளைகள் படிக்க ஏதுவாக இருந்தது இந்த ஃப்ரோபல் முறை. இந்த முறையே இன்று வளர்ந்து உலகின் அனைத்து நாடுகளிலும் எல்.கே.ஜி மற்றும் யு.கே.ஜி ஆகியிருக்கிறது.

ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த இசபெல் சிறுவயதிலேயே தாயையும், வளர் பருவத்தில் தந்தையையும் இழந்தவர். ஆனால் கல்வி இசபெல்லைக் கைவிடவில்லை. லண்டனில் ஆசிரியர் பயிற்சி பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றிய இசபெல்லை 1869–ம் ஆண்டு இந்தியாவுக்கு அனுப்ப தலைமைச் செயலர் முடிவெடுத்தார். மிஷனரிகள் கையிலிருந்த கல்வியை அனைவருக்குமானதாக மாற்ற வேண்டிய கட்டாயம் இருந்ததால், மதச்சார்பற்ற ஆளுமையே மதராஸ் மாகாணத்துக்குத் தேவையாக இருந்தது.

அவ்விடத்தைக் கச்சிதமாக நிரப்பினார் 22 வயதான இசபெல் பிராண்டர். மதராஸின் அரசுப் பெண்கள் பள்ளியில் தலைமை ஆசிரியராக 1870–ம் ஆண்டு வந்து சேர்ந்தார் இசபெல். இந்தியச் சூழலில் பெண் கல்வி எப்படித் தடுமாறி இருக்கிறது, அதைச் சரிசெய்ய என்ன முன்னெடுப்புகள் செய்வது என்று களத்திலிருந்து அலசி ஆராய்ந்து மாற்றங்களை மெதுவாவே புகுத்தினார். அவரது திறமைக்கும் உழைப்புக்கும் பரிசாக 1881–ம் ஆண்டு இன்ஸ்பெக்டிரஸ் பதவி வந்து சேர்ந்தது. இதற்கிடையே மணமாகி, கணவரும் இறந்துவிட, விதவையாகிப் போன இசபெல் கல்விப்பணியில் இன்னும் தீவிரம் காட்டினார். தன்னுடன் பணியாற்ற பெண் அலுவலக உதவியாளர் வேண்டும், மாகாணத்தின் மூலை முடுக்கெல்லாம் பயணம் செய்ய மாட்டு வண்டி வசதி வேண்டும் என்று கேட்டுப்பெற்றார். பல இரவுகள் அந்த மாட்டு வண்டிகளிலேயே தனியாகத் தூங்கிக் கழித்திருக்கிறார்.

மதராஸில் பணி தொடங்கிய பின் தான் ஃப்ரோபல் பற்றிய அறிமுகமும், அவரது கிண்டர்கார்டன் முறை பற்றிய தெளிவும் இசபெல்லுக்குக் கிடைத்தது. மாகாணத்தின் பள்ளி ஆசிரியைகளுக்கு கிண்டர்கார்டன் கல்விமுறையில் சிறுசிறு மாற்றங்கள்

செய்து அறிமுகம் செய்தார் இசபெல். தமிழை அருமையாகப் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்ட இசபெல், கிண்டர்கார்டன் முறையில் கற்பிப்பது எப்படி என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்கள் எழுதினார். ஆசிரியைகளுக்குப் புரியும் வண்ணம் 'மேஜிக் லான்டேர்ன்' சிலைடு ஷோக்கள் (சினிமாவுக்கு முந்தைய படச்சுருள்கள்) நடத்தி விளக்கினார்.



மனப்பாடம் செய்து படிக்கும் வழக்கத்தை இந்தியர்களிடம் மாற்ற வேண்டும் என்ற கருத்து கொண்டவர் இசபெல். அதேபோல் பெண்களுக்குத் தொழிற்கல்வி அளிக்கவேண்டியதன் கட்டாயத்தையும் அரசுக்குத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். 1882–ம் ஆண்டு இந்தியாவின் கல்வி நிலை பற்றி ஆராய வந்த ஹண்டர் கமிஷன் முன் தோன்றி, தன் அனுபவங்களைப் பகிர்ந்த இசபெல், இந்தியாவின் உள்கட்டமைப்பை பலப்படுத்த வேண்டிய அவசியத்தை எடுத்துச் சொன்னார். "கவர்னர் வண்டி செல்லும் பாதையைத் தேர்ந்தெடுத்து அடுத்த சில நாள்களில் என் பயணங்கள் இருக்குமாறு பார்த்துக்கொள்வேன். காரணம், அப்போது தான் சாலைகள் பயணம் செய்யக்கூடிய வகையில் செப்பனிடப்பட்டிருக்கும். இந்த அமைப்புகளின்றி இங்கே கல்வியைக் கொண்டு சேர்க்க இயலாது" என்று கூறினார்.

தன் கல்விப்பணி என்ற குறுகிய வட்டத்துக்குள் சிக்கிக்கொள்ளாமல் பொதுமக்களிடம் சகஜமாகப் பல அன்றாட பிரச்னைகள் பற்றி விவாதித்து, அவற்றுக்குத்தீர்வுகளும்கண்டு சொன்னார். ஆசிரியர் அமைப்புகளை உருவாக்கினார். படிக்க முடியாமல் வீடுகளில் முடங்கிப் போன பெண்களுக்கான 'வீட்டுக் கல்வித் திட்ட'த்தை அரசுடன் இணைந்து முன்னெடுத்தார்.

ஃப்ரோபலின் கம்பளிப் பரிசுகளை மதராஸ் மாகாணத்தில் பயன்படுத்த இயலாது என்பதால், கொண்டைக்கடலை, பட்டாணி போன்ற பொருள்களைத் தந்தார். காகிதம் மடித்துக் கணிதம் பயில வசதி இல்லாத மாணவர்களுக்குப் பனை ஓலை மற்றும் வாழை இலையை மடித்துக் கோணங்கள் சொல்லித் தரும் முறையை அறிமுகம் செய்தார். 1899–ம் ஆண்டு 'கிண்டர்கார்டன் டீச்சிங் இன் இந்தியா' என்ற நூலை எழுதினார். கிறிஸ்துமஸ் கேரல்ஸை ஐரோப்பியக் குழந்தைகள் பாடி கிறிஸ்துமஸ் கொண்டாடுவது போல, பொங்கல் போன்ற தமிழர் பண்டிகைகளையும் செயல்வழிக் கற்றல் மூலம் சொல்லித் தந்தார். இந்தியாவில் உள்ள விலங்குகள், வேளாண்மை, பறவைகள், செடி கொடிகள் கொண்டே பாடங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அவரது ஆசிரியையான சூசன் ராஜகோபால் மூலம் தமிழில் பாடல்கள், கதைகள் என்று கிண்டர்கார்டன் பாடங்களை உருவாக்கினார். அணிலின் முதுகில் ராமன் கோடு போட்டதாக நாம் சிறு வயதில் படித்த பாடல் அவ்வாறு உருவானதுதான். இந்து சமூக மாற்றத்துக்கான அமைப்பு, ஆசிரியர் கூட்டமைப்பு போன்ற அமைப்புகள் மூலமும் பெண் கல்விக்கான களப்பணி இசபெல் வழிகாட்டுதலில் நடந்தது. இதுபோக, வெளியே செல்ல முடியாத இஸ்லாமிய கோஷா பெண்களுக்காகவும் தொடர் கல்வி குறித்த உரைகளைத் தன் வீட்டிலேயே நடத்தினார். படித்த நூல்கள் பற்றி விளக்கும் பெண்களுக்குப் பரிசுகள், சிறந்த பாடங்களை வடிவமைக்கும் பெண்களுக்குப் பணப் பரிசுகள் என்று புதிது புதிதாகப் பெண்களைக் கல்விக்குள் இழுக்கப் பல முயற்சிகள் செய்தார்.

இந்தியாவில் பிறக்கவில்லை என்றாலும் இந்தியாவின் மகள்களில் தலையாய பெண்களுள் ஒருவர் இசபெல். கிட்டத்தட்ட 33 ஆண்டுகள் மதராஸ் மாகாணத்தில் பெண் கல்விக்காகக் கடுமையாக உழைத்து இன்றும் நாம் கே.ஜி. வகுப்புகள் படிக்க வழி செய்தவர். அடுத்த முறை அணில் முதுகில் கோடுகள் வந்த கதையை உங்கள் வீட்டுக் குழந்தைகள் பாடக் கேட்டால், தமிழகத்தில் பெண் கல்விக்கு சிறு அணிலாக உழைத்த இசபெல் பெயர் உங்களுக்கு ஞாபகம் வரும்தானே?

**– நிவேதிதா லூயிஸ்**





# குழந்தைகளைப் புரிந்து கொள்வோம்!

"இன்னைக்குக் குழந்தையைக் கூப்பிட வரும்போது, அப்படியே பிரின்சிபாலைப் பார்த்துட்டுப் போங்க" என்று பள்ளியிலிருந்து போன் வந்ததுமே டென்ஷனாகிவிட்டார் ரவி. 'என்ன பிரச்னையோ' என்று படபடப்புடன் பிரின்சிபால் அறையில் நுழைந்தார். "ஸ்கூலைப் புதுசா பெயின்ட் பண்ணிக்கிட்டு இருக்கோம். உங்க பொண்ணு அந்தச் சுவர்ல கிறுக்கியிருக்கா. அதுவும் பிரஷ்ஷை வச்சி பெயின்ட்டால கிறுக்கியிருக்கா. அதைச் சரி பண்ண ஏகப்பட்ட செலவாச்சு. யு.கே.ஜி குழந்தைங்கறதால எதுவும் சொல்லலை. குழந்தைக்கு நல்ல பழக்கங்கள் கத்துக் கொடுங்க" என்றார் பிரின்சிபால்.

அடுத்தவர்களின் பொருட்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என வீட்டுக்கு வரும் வழி முழுக்க மகளுக்குப் பாடம் எடுத்தார் ரவி. "அது சரி, கிறுக்கினது நீதான்னு எப்படிக் கண்டுபிடிச்சாங்க?" என்று கேட்டார். "அதுதான் எனக்கும் தெரியலைப்பா" என்றாள் மகள்.

வீட்டுக்கு வந்து திரும்பவும் பலமுறை கேட்டபோதும், குழந்தை அதே பதிலையே சொன்னது. "சரி, நீ என்ன எழுதினே?" என்று அப்பா இன்னொரு கேள்வி கேட்டதும் குழந்தை சொன்ன பதில், "நான் என் பெயரை எழுதினேன்." அப்பாவுக்கு அசடு வழிந்தது.

இன்னொரு குழந்தை. பள்ளியிலிருந்து திரும்பும்போதே உற்சாகமாக வேனில் வந்து இறங்கினான். தன்னைக் கூட்டிச் செல்ல பஸ் ஸ்டாப்பில் காத்திருந்த அம்மாவிடம், "மம்மி, இன்னைக்கு ஸ்கூல்ல நான் ஒரு பிரைஸ் ஜெயிச்சேன்" என்று சந்தோஷக் கூச்சல் போட்டான்.

அம்மா உற்சாகமாகி, "எக்ஸாம்ல நல்ல மார்க் எடுத்தியா?" என்றார். "இல்லம்மா" என்றான். "ஏதாவது விளையாட்டுப் போட்டியில ஜெயிச்சியா?" என்ற கேள்விக்கும் "இல்லை" என்றே சொன்னான். "அப்புறம் எதுக்கு பிரைஸ்?" என்றதும், "கிளாஸ்ல எல்லாப் பசங்களும் அவங்க அம்மா வயசைச் சொன்னாங்க. நானும் சொன்னேன். மத்த எல்லாரோட அம்மாக்களைவிடவும் உனக்குதான் வயசு அதிகம். அதனால நான் பிரைஸ் ஜெயிச்சேன்" என்று பாக்கெட்டிலிருந்து சாக்லேட் எடுத்தான்.

'வயசு என்பது வெறும் நம்பர்தான்' என்றெல்லாம் தத்துவம் பேசும் அம்மாவே இந்த விஷயத்துக்கு அசடு வழிந்தார்.

மூன்றாவதாக வேறொரு குழந்தை. அந்தக் குழந்தைக்கு ஐந்து வயதானபோது தாத்தா உற்சாகமாக ஒரு விஷயத்தைச் சொன்னார். "யாராவது உன் வயசு என்ன என்று கேட்டால், வலது கையில் இருக்கும் ஐந்து விரல்களையும் விரித்து 'ஐந்து வயது' என்று காட்டு" என்றார்.

"சரி தாத்தா, அடுத்த வருஷம் பர்த் டேவுக்கு அப்புறம் என்ன செய்யலாம்?" என்றான் பேரன். "இன்னொரு கையில ஒரு விரலைச் சேர்த்து விரிச்சு 'ஆறு வயசு'ன்னு காட்டு" என்றார் தாத்தா. இப்படியே பத்து விரல் வரை கேள்வியும் பதிலும் நீண்டன.

"பதினோரு வயசு ஆகும்போது நான் என்ன செய்யறது?" என்றான் பேரன். தாத்தா இதற்கு பதில் சொல்லத் தெரியாமல் விழித்தார். 'கால் விரல்களையும் சேர்த்துக் காட்டச் சொல்லலாமா? காலைத் தூக்கிக் காட்டினால் நன்றாகவா இருக்கும்?' என்றெல்லாம் குழம்பினார். பேரன் எளிமையாக, "எதுக்கு விரலைக் காட்டணும்? பதினோரு வயசுன்னு வாயாலயே சொல்லிடலாமே" என்றபோது, தாத்தா அசடு வழிந்தார்.

# விதை மாணவர் தேர்வு தொடர்கிறது!

ஒவ்வோர் ஆண்டும் விதைத் திட்டத்துக்கான மாணவர்களைத் தேர்வுசெய்யும் பணி ஏப்ரல் மாதம் தொடங்கி ஜூலை மாதம் வரை நடைபெறும். உயர்கல்வி உதவிக்காக விண்ணப்பித்த மாணவ, மாணவிகள் அனைவரின் விவரங்களும் பரிசீலிக்கப்பட்டு, முதல்நிலையாக மாணவர்களின் நேர்காணல் நடைபெறும். அதில் தேர்வான மாணவர்களை அகரம் தன்னார்வலர்கள் அவர்களின் ஊருக்கே சென்று இல்ல நேர்காணல் செய்வார்கள். அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கான கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

மாணவர்கள் தேர்வுக்கான பணிகளை விடுமுறை நாட்களில் அகரம் அலுவலகத்தில் குழுக்களாகப் பிரிந்து செய்வார்கள். இந்தத் தேர்வுப்பணியைச் செய்யும் குழுக்களில் நமது தன்னார்வலர்கள், முன்னாள் மாணவர்கள், இந்நாள் மாணவர்கள் சேர்ந்து பங்கு பெறுகிறார்கள்.











## மருத்துவ மாணவர்களுக்குப் பயணப் பட்டறை!

அகரம் விதை மாணவ, மாணவிகள் பல்வேறு பாடப்பிரிவுகளில் சேர்ந்து படிப்பது போலத் துணை மருத்துவப் பிரிவுகளிலும் படிக்கிறார்கள். காவேரி, வெங்கடேஷ்வரா, எஸ்ஆர்எம், பத்மாவதி, கேஜி வித்யாஷ்ரம் மற்றும் ராஜலஷ்மி ஆகிய ஆறு கல்லூரிகளில் படிக்கும் 86 துணை மருத்துவ மாணவர்களுக்கான பயணப் பட்டறை இரண்டு நாட்கள் நடைபெற்றது. பயணங்கள் செய்து விதை மாணவர்கள் கற்றுக்கொண்டனர்.

முதல் நாள் சிருஷ்டி அறக்கட்டளைக்குப் பயணம். அது, 4 முதல் 21 வயது வரையுள்ள அறிவுசார் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான இல்லம். நமது மாணவர்கள், அங்குள்ள குழந்தைகளின் செயல்பாடுகளைப் பற்றித் தெரிந்து கொண்டார்கள். அன்று பிற்பகலில் தாய்த்தமிழ்ப் பள்ளியில் உள்ள மாணவர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. இரண்டாவது நாள், பூந்தமல்லியில் உள்ள அரவிந்த் கண் மருத்துவமனைக்குச் சென்றனர். மருத்துவமனையின் உள்கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளைப் பற்றி அறிந்தனர். அங்கு பல்வேறு வகை அறுவை சிகிச்சைகள் நடைபெறுவது குறித்த தகவல்களை மாணவர்களிடம் தெரிவித்தனர். ஒளிவிலகல், மருந்தகம், நீரிழிவு ரெட்டினோபதி, லேசர் அறுவை சிகிச்சைப் பிரிவு, கண்புரை மற்றும் குளுக்கோமா பராமரிப்பு பிரிவு போன்ற பல துறைகளைப் பற்றி அறிந்தனர்.

அதனைத் தொடர்ந்து மருத்துவக் கல்லூரி பேராசிரியர் ரோஸி வெண்ணிலா அவர்கள், குழுவாக இணைந்து வேலை செய்வதன் முக்கியத்துவம் மற்றும் நம் வாழ்வை மாற்றியமைத்தல் போன்ற பல முக்கியமான விஷயங்களைக் கற்றுக் கொடுத்தார்.




# 7.5% ஒதுக்கீட்டில் என்னென்ன படிக்கலாம்?

அரசுப்பள்ளி மாணவர்களுக்கும் உயர்கல்வி கிடைக்க வசதியாக, தமிழ்நாடு அரசு கொண்டுவந்ததுதான் 7.5% ஒதுக்கீடு. 6–ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை அரசுப் பள்ளியில் படித்த மாணவர்களுக்கு மட்டுமே இது கிடைக்கும். இந்த 7.5% சிறப்பு ஒதுக்கீட்டில் உயர்கல்வி படிக்கச் சேரும் மாணவர்களுக்கு கல்விக்கட்டணம், உணவுக் கட்டணம், தேர்வுக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்தையும் அரசே செலுத்தும். இந்தச் சிறப்பு ஒதுக்கீடு எந்தெந்தப் படிப்புகளில் கிடைக்கிறது?

- அண்ணா பல்கலைக்கழகத்தின் கலந்தாய்வு மூலம் எஞ்சினியரிங் படிக்கச் சேரும்போது, இந்த 7.5% சிறப்பு ஒதுக்கீட்டுப் பலனைப் பெறலாம். மதிப்பெண் கட் ஆஃப் நன்றாக இருந்தால், சிறந்த கல்லூரிகளைத் தேர்வுசெய்து படிக்கலாம்.
- அண்ணா பல்கலைக்கழகம் வழங்குகிற B.Arch எனப்படும் கட்டடக்கலைப் படிப்புகளில் சேர்வதற்கு NATA அல்லது JEE தேர்வு எழுதி தேர்ச்சி பெற வேண்டும். இப்படித் தேர்ச்சி பெறுவோருக்கு 7.5% ஒதுக்கீட்டில் இடங்கள் கிடைக்கும். பிளஸ் 2–வில் பெற்ற மதிப்பெண்ணையும் NATA தேர்வில் பெறுகிற மதிப்பெண்ணையும் அடிப்படையாகக் கொண்டு சேர்க்கை நடைபெறுகிறது.
- நீட் தகுதித்தேர்வு மூலம் தகுதி பெற்று எம்.பி.பி.எஸ், பல் மருத்துவம் மற்றும் இந்திய மருத்துவப் படிப்புகளான சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேதா (BAMS), யுனானி (BUMS), ஹோமியோபதி (BHMS) ஆகிய படிப்புகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% ஒதுக்கீடு உண்டு.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளும் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் தமிழ்நாட்டில் வேளாண்மை சார்ந்த படிப்புகளை வழங்குகின்றன. இந்தப் படிப்புகளுக்கும் 7.5% ஒதுக்கீடு பொருந்தும்.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை சார்ந்த மருத்துவப் படிப்புகளை அளிக்கிறது. கால்நடை மருத்துவருக்கான B.V.Sc (Bachelor of Veterinary Science) மற்றும் இதே பல்கலைக்கழகம் வழங்கும் Dairy Technology, Food Technology மற்றும் Poultry Technology படிப்புகளில் சேர்வோருக்கும் 7.5% ஒதுக்கீடு உண்டு.
- மீன்வளம் சார்ந்த படிப்புகளை தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் வழங்குகிறது. இதுதவிர அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் மீன்வளம் சார்ந்த படிப்புகள் உள்ளன. இவற்றுக்கும் 7.5% ஒதுக்கீடு பொருந்தும்.
- தமிழகத்தில் சட்டக்கல்வியை வழங்கும் உயரிய நிறுவனம், ஸ்ரீரங்கத்தில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழகம். இதில் சேர்வதற்கு CLAT என்கிற நுழைவுத்தேர்வு எழுதி தேர்ச்சி பெற வேண்டும். இப்படி சேர்கிற அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 7.5% ஒதுக்கீடு உண்டு. இதேபோல, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளி (School of Excellence), பல்கலைக்கழகத்தின் இணைப்பு பெற்ற 15 அரசு சட்டக் கல்லூரிகள் மற்றும் 8 தனியார் சட்டக் கல்லூரிகளில் சேர்வதற்கும் அரசுப் பள்ளி மாணவர்கள் 7.5% ஒதுக்கீடு பெற முடியும்.



Owned, Published by T.J. GNANAVEL, 10/55, Raju Street, West Mambalam, Chennai - 600 033 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


திருக்குறள் 100
வள்ளுவர் வழியில் வாழ்ந்தவர்கள் வரலாற்றுடன் குறள்
சிவகுமார்

Yadhum Monthly - Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2016/69050.
Postal Registration No. TN/CC(S)DN/612/22-24.
WPP License No - TN/PMG(CCR)/WPP 665/2022-2024 Date of Publication First week of every month.
Posted at Egmore RMS (Patrika Channel) Posted on 5th to 11th of every month.



**வேர் பரப்பும் மரங்களுக்கு**
**நீர் தரும் நிலமே ஆதாரம்!**
**கோடையின் கடுமை தவிர்க்க**
**மழைநாளில் மரம் வளர்ப்போம்**
**வீட்டைப் போலவே சூழலையும் பாதுகாப்போம்**



மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்

- வேஷ்டிகள்
- சர்ட்டுகள்
- பனியன்கள்

Shop online @ www.ramrajcotton.in
கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்
Follow us RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia

If undelivered
please return to

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.
போன்: 99529 20801